Paul Bakers
Specialists in Egg & Eggless Cakes for all occasions
Also Bread, Baps, Rolls, etc.
CALL 020 8813 8322
SOUTHALL 020 8574 8388
32, SOUTH ROAD, / 143, NORWOOD ROAD
ALSO IN FELTHAM & ISLEWORTH

FREE இலவசம்
The UDHAYAN
# உதயன்
Estd: 1996
UK's No.1 National Tamil Newspaper

+44(0) 208 33 56780
WWW.SUNTVUK.COM

e-mail: thelondon@udhayan.freeserve.co.uk
UN 48 Mar/Apr 2006
For News: 020 8279 0354

உதயன் செய்திப் பொறுப்பாளர் த.ஜெயபாலன். செய்தித் தொடர்புகளுக்கு : 0208 2790354
உதயனில் வெளிவரும் விளம்பரங்களுக்கு உதயன் எந்த விதத்திலும் பொறுப்பல்ல.

**உலகெங்கும் அமைதியும் சமாதானமும் மலரும் வண்ணம் இவ் இனிய தமிழ் புத்தாண்டு பிறந்திட வேண்டுகிறோம்**

## ஹறோ கிழக்கிற்கு 1997ம் ஆண்டிலிருந்து பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதை ஒரு வரப்பிரசாதமாகக் கருதுகிறேன்.



த புஸ்பலிங்கம்

பதினெட்டு ஆண்டுகளாக ஆட்சியிலிருந்த கொன்சேர்வேரிவ் கட்சி 1997ம் ஆண்டில் பதவியிலிருந்து விலகிய போது பிரித்தானியாவின் நிலைமை" நாலில் ஒரு ஓய்வு பெற்ற ஊதியர் வறுமையில் வாடியும் ஐந்தில் ஒரு குடும்பத்தில் வேலைபுரிவோர் யாருமின்றியும் பிறக்கும் குழந்தைகளில் மூன்றில் ஒன்று வறுமைக் கோட்டின் கீழும் இருந்தது.

ஆனால் இன்று 1997ம் ஆண்டிலிருந்த நிலைமைக்கு எதிர்மாறாக 800 000 சிறுவர்கள் உட்பட 2.4 மில்லியன் மக்கள் பிடியிலிருந்து மீட்கப்பட்டமைக்காக லேபர் அரசாங்கத்திற்கு நன்றி கூறுகின்றேன். தற்போது பிரித்தானியாவில் சிறுவர் வறுமைநிலை ஏனைய ஐரோப்பிய நாடுகளை விட வேகமாகக் குறைந்து வருகிறது. கடுமையாக உழைக்கும் குடும்பங்கள் சிறுவர் வரி உதவிப் பணம் பெறுகிறார்கள். தற்போது பெற்றோர்களுக்கு மலிவானதும் தரமானதுமானதுமான குழந்தைப் பராமரிப்பு சேவை, வைத்திய சேவை, கல்வி வசதி மற்றும் குழந்தைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு வழிகோலும் பயிற்சியரங்குகள் என்பவற்றை இலகுவில் பெறக்கூடிய வசதி வாய்ப்புக்கள் நாட்டில் கானப்படுகின்றன.

தற்போது வழங்கப்படும் ஓய்வு பெற்றவர்களுக்கான ஊதியத் தொகை ஒரு மில்லியன் கனக்கான ஓய்வு பெற்ற ஊழியர்களை வறுமைநிலையிலிருந்து உயர்த்துவதற்கு உதவியுள்ளதாக மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. அறுபது வயதிற்கு மேற்பட்ட ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு எரிபொருள் உதவிப் பணமாக £200 பவுண்களும் எண்பது வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு £300 பவுண்களும் வழங்கப்படுகிறது. தேசிய சுகாதார சேவைகளுக்கு வழங்கப்பட்ட மேலதிக நிதி, சிகிச்சைக்காகக் காத்திருக்கும் நோயாளிகளின் பட்டியலைக் குறுக வைத்ததுடன் புற்றுநோய் மற்றும் இதய நோயாளிகள் விரைவாக சிகிச்சை பெற்று வருவதையும் உறுதிப்படுத்தியுள்ளது. (12ம் பக்)

RIGHT PRICE
TRADE CASH & CARRY
((((( Many Opening Offers )))))
UNIT 8 WHITBY AVENUE PARK ROYAL INDUSTRIAL ESTATE
LONDON NW10 7SF
CHOCOLATES, DRINKS, BEER, RIZLA, STATIONERY, TOILETERIES, TOYS
TEL:020 3188 3005 FAX:020 3188 3006

MIDDX TYRES LTD
NEW, PART WORN & REMOULDS MOT PREPERATIONS, STEERING
020 8813 91 54 / 84
EXHAUSTS, WHEELS, SUSPENSION, 4 WHEEL ALIGNMENTS, BRAKES
41 - 43 The Green, Southall, Middx
WWW.MIDDXTYRESLTD.COM

A1 Auto Centres
TYRES ALLOYS EXHAUSTS SHOCKS BATTERIES BRAKES SERVICING
State of the art 4 wheel electronic alignment
Aloy Wheels
Brake Pads
Come in for a winter check
Best Deal in Town
Powerflow Stainess Steel exhaust system for any car
Next to Morrisons 0208 204 6868
Bowman Trading Estate, West Morland Rd, NW9

## மே 4 உள்ளாட்சிமன்றத் தேர்தல் 25க்கும் மேற்பட்ட தமிழ் வேட்பாளர்கள் களத்தில்



மே 4ல் இடம்பெறவுள்ள உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தலில் 25க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் களமிறங்கி உள்ளனர். முன்னர் போட்டியிட்டு வெற்றி பெற்று கவுன்சிலர்கள் ஆனவர்களும் வெற்றியைத் தவறவிட்டவர்களும் மீண்டும் களமிறங்கி உள்ளனர். இவர்களுடன் புது முகங்களாக முன்னாள் ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயத் தலைவர் கருணலிங்கம் ஹெஸ்ரோன் நோத்திலும் நவரட்ணம் பரமகுமாரன் (படம்: இடம்) வெம்பிளி சென்றலிலும் தொழிற்கட்சியின் பட்டியலில் போட்டி இடுகின்றனர்.

கடந்த 30 ஆண்டுகால சேவைக்காக Year of the Voulnteer 2005 விருது வழங்கப்பட்ட கவுன்சிலர் போல் சத்தியநேசன் ஈஸ்றஹாம் நோத்தில் தொழிற் கட்சியின் பட்டியலில் போட்டியிடுகிறார். சுனாமி நிவாரணம், இளம் தலைமுறையினரை சிறந்த பிரஜைகளாக்க அவர் எடுத்துக் கொள்ளும் முயற்சி களுக்காக விருது வழங்கப்பட்டது.

தமிழ் மக்கள் உட்பட அனைத்து மக்களுக்கும் இன, மத வேறுபாடின்றி தன்னாலான அனைத்து (தொடர்ச்சி 2ம் பக்கம்)



கவுன்சிலர் போல் சுனாமி நிவாரணம் தொடர்பாக இலங்கைக்கான சர்வகட்சித் தலைவர் அன்டி லவ்வை சந்தித்த போது.

FOR EVERYTHING MERCEDES AND HONDA
Kams
SPECIALIST CARS
Holmstall Parade, Edgware Road, Burnt Oak HA8 5HX
020 8205 2051
visit our website www.kams.co.uk

TMC Wholesale
We guarantee to beat all other wholesalers and cash & carry prices
Hardware, Stationery, Household, D.I.Y, Electrical, Kitchenware
1,000's of £1.00 lines in stock - strictly wholesale
Tel: 020 8803 5678 Fax: 020 8803 5656
Unit 5 H Nobel Road, Eley Estate, Edmonton, London, N18 3BH
Opening Hours: Mon - Fri 9.00am - 7pm Sun 9.00am - 2.00pm
E.mail: tmcwholesale@hotmail.com

BEJAY'S
ICE CREAM AND LOLLIPOPS
Discounted Ice Cream Walls, Nestle, Treats, Cadbury, Mars and Many OtherBrands
Delivered 7 Days A Week
Resturant & Shop Etc
Wall's
61 - 65 GRANGEWOOD ST EASTHAM LONDON E6 1HB
TEL: 020 8471 9405
FAX: 020 8472 3406
WHOLESALE SUPPLIER FOR LEADING ICE CREAM MANUFACTURERS

Quality Japanese Car Parts
Discount Prices
Japarts
08450 66 44 22
www.japarts.co.uk

lifestylemortgages
CAN'T GET A MORTGAGE?
POOR CREDIT HISTORY?
UNABLE TO PROVE INCOME?
[MORTGAGE OR RE-MORTGAGE]
YOUR HOME MAY BE REPOSSESSED IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON YOUR MORTGAGE
NO MORTGAGE - NO FEE
Call : 020 8574 2008
The overall cost for comparison is :
6.0% APR
This is a typical rate that may vary depending on your personal circumstances
6A SOUTH ROAD, SOUTHALL UB1 1RT
9.00 - 9.00 MONDAY TO SATURDAY
FOR FRIENDLY ASSISTANCE AND A PERSONALISED ILLUSTRATION
A MAXIMUM FEE OF 1% OF ANY LOAN ARRANGED IS USUALLY CHARGED BY LIFESTYLE MORTGAGES

IDEAL GLAZING
WITH OVER 20 YEARS EXPERIENCE
Manufacturers & Installers of uPVC and Aluminium
FOR FREE ESTIMATE CALL
020 8574 8342
Fax: 020 8843 1903
IDEAL GLAZING (EURO) LTD
8 The Green, Southall
Middlesex, UB2 4AN

பிரித்தானியத் தமிழர்களின் செய்திப் பத்திரிகை

# உதயன்

உண்மை ! நடுநிலமை ! மக்கள் நலன் !

1997 முதல் அதிக பிரதிகளுடன் பரந்த விநியோகத்தைக் கொண்டு வெளிவரும் தமிழ் மக்களின் ஒரே சமூகப் பத்திரிகை.

தொடர்புகளுக்கு :
UDHAYAN
P O Box 35806
London, E11 3JX, UK
Tel : 020 8279 0354

ஆசிரியர் குழு:
தலைமை நிருபர்:
த ஜெயபாலன்
செய்தி ஆய்வு:
ரி கொன்ஸ்ரன்ரைன்
விளம்பரப் பொறுப்பாளர்:
த புஸ்பலிங்கம்

நிருபர்கள்:
கே அரவிந்தன் (இலண்டன்)
பொன் சிவகுமார் (இலண்டன்)
கா சாந்தி (இலண்டன்)
கே பாலன் (ஐரோப்பா)
வி அருள் (கனடா)
இ சுரேஸ் (கனடா)

உதயன் பத்திரிகை GNM(PVT) LTD இனால் மாதாந்தம் வெளியிடப்பட்டு வருகிறது. இதில் வெளிவரும் கருத்துக்கள் எப்பொழுதும் உதயன் பத்திரிகையினதோ அல்லது வெளியீட்டாளர்களினதோ கருத்துக்களாக இருக்கும் என்பதில்லை. இப்பத்திரிகையில் உள்ள செய்திகள் உண்மையான தகவல்மூலங்களில் இருந்து பெறப்பட்ட சரியான தகவல்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பிரசுரிக்கப்பட்டு உள்ளது. இருப்பினும் இதில் வரும் தவறுகளுக்கு வெளியீட்டாளர்கள் பொறுப்பல்ல.

Venus Double Glazing Co
(HOME IMPROVEMENT)
UPVC &Aluminium Replacement Windows, Patio Doors, Conservatories, Porches & Residential Doors
ESTABLISHED SINCE 1980
Showroom:
Unit 5, 255 Water Road, Abbeydale Industrial Estate, Wembley, Middlesex HA0 1JW.
FENSA
Tel: 020 8998 7710

HEMI'S PARTY SHOP
17, Station Parade, Northolt Rd, South Harrow, HA2 8 HB
(Opposite Netto)
Tel : 020 8869 0355
Balloons, Helium Hire, Banners, Cakes, Photo Balloons, Balloon Decorating Service for any Occasion.

Restaurant FOR SALE
In Queensbury
90 Seats
Double shop
2 bed flat above
8 years renewable lease
rent £27,000 pa
160K ono
07890990640

TYRE CHECK &
AUTO SPARES - ACCESSORIES
(BRITISH & FOREIGN CARS)
NEW & PART WORN TYRES | BATTERIES
WHEEL BALANCING | EXHAUST
WHEEL ALIGNMENT | BRAKES
NEW & SECOND HAND RIMS | SERVICE
SHOCK ABSORBERS | MOT WORK
OPEN SEVEN DAYS A WEEK
MON-SAT 8.30AM TO 7PM - SUN 9.00AM TO 6.00PM
368, HIGH ST NORTH, EASTHAM, LONDON, E12 6PH
TEL : 020 8586 0886
FAX : 020 8470 4745
MOBILE : 07956353774

SAGAR CERAMICS
TILES & BATHROOM
NEW STORE OPENING OFFER
ROCA. BRISTAN.GROHE. IDEAL STANDARD, TYWFORD.KUDOS
OPEN 7 DAYS A WEEK
549Pinner Road, Nort Harrow,Middx,HA2 6EQ
Tel : 02088631400
Mbl: 0790556675, Fax:02084242234
E:sagarceramics@btconnect.com

முன்பக்கத் தொடர்ச்சி

### அரச விருதுகள் வென்றவர் மக்களிடம் ....

ஒத்துழைப்பையும் வழமைபோல் தான் செய்வேன் எனத் தெரிவித்த போல் சத்தியநேசன் அவர்களில் நம்பிக்கை வைத்து மீண்டும் இத்தேர்தலில் நிற்கிறேன் எனத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் தான் வெற்றி பெறுகிறெனோ இல்லையோ தனது சேவையை எப்போதும் போல் மக்களுக்கு வழங்குவேன் என்றார். தேர்தலில் வென்றால் கூடுதலான சில சேவைகளை வழங்க அது உதவியாக இருக்கும் என்று தெரிவித்தார். (உள்ளாட்சித் தேர்தல் 5ம் பக்கம் பார்க்க)

## டென்மார்க் கவுன்சிலரின் பதவி பறிபோனது

டென்மார்க் தமிழ் கவுன்சிலர் பதவி நீக்கப்பட்டார். பொதுக் கூட்டமொன்றில் பயங்கரவாதத்தை ஊக்கப்படுத்தும் விதமாக உரையாற்றினார் என்பதற்காகவே இவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். சில வாரங்களுக்குமுன் இடம்பெற்ற இச்சம்பவம் தாம் வாழும் நாடுகளின் சட்டதிட்டங்களை மீறாத வகையில் தமது உரைகளை நிகழ்த்தும் படி நிர்ப்பந்தித்துள்ளது.

## மசாஜ் பாலரால் திரும்பிய இளைஞர் அடித்துக் கொல்லப்பட்டார்

மயூரன் மகேந்திரராஜா (22) என்ற இளைஞர் கிறீன்போர்ட் வீதியில் வைத்துக் கொல்லப்பட்டார். இச்சம்பவம் மார்ச் 16 மாலை 7:30 அளவில் இடம்பெற்றது. சவுத்தோலைச் சேர்ந்த இந்த இளைஞர் நண்பர்களுடன் மசாஜ் பாலருக்கு சென்றுவிட்டுத் திரும்பும் வழியில் தாக்கப்பட்டுள்ளார். அவ்விளைஞர் தப்பி ஓடிய போதும் ரெஸ்கோ மெற்றோ கார் பார்க்கில் வைத்தும் தாக்கி உள்ளனர்.

காயப்பட்ட இளைஞர் நோத் விக் பார்க் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு அனுமதிக்கப்பட்டு சில மணிநேரங்களில் அவ்விளைஞர் மரணமடைந்தார். தலையிலேற்பட்ட காயத்தால் அவ்விளைஞர் மரணமானதாக பிரேத பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## மூன்றாம் பக்கத் தொடர்ச்சி .... சீட்டும் சீரழிவும்

பயன்படுத்தப்பட்டதா என்பது தெரியவில்லை. இவ்வாறு வட்டிக்குப் பெறப்பட்ட பணம் வட்டியும் முதலுமாக 40,000 - 60,000 - 100,000 என வளர்ந்திருப்பதாக எமக்குத் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு வட்டிக்கு வழங்கியவர்களில் ஒருவர் எம்மிடம் பேசுகையில் எனது பணத்திற்கு அவர்கள் இக்கடையை எனக்கு மாற்ற உள்ளதாகத் தெரிவித்தார்.


### எப்படி இந்த நிலை?

நீண்டகாலமாக இந்நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் எப்படி இந்நிலைக்குத் தள்ளப்பட்டனர் என்பது பலருக்கும் ஆச்சரியமாகவே உள்ளது. அது பற்றி சந்திராவின் சகோதரர் விஜயகுமாரிடம் கேட்ட போது அவர் தனக்கும் என்ன நடந்தது என்று தெரியவில்லை என்று கூறினார். தனக்கும் அக்கா £60,000 பவுண் தரவேண்டும் என்றார். தற்போது தன்னாலும் எந்த உதவியும் செய்ய முடியவில்லை என்று தெரிவித்தார்.

இவர்களிடம் சீட்டுபிடித்த ஒரு சிலர் சீட்டை ஆரம்பத்திலேயே எடுத்துவிட்டு பணத்தைக் கட்டவில்லை என்பதை எம்மால் உறுதிப்படுத்த முடிகிறது. ஆனால் அவர்கள் எவ்வளவு தொகையை கட்ட வேண்டி உள்ளது என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. அத்தொகை அவர்கள் செலுத்த வேண்டிய தொகையை ஈடுகட்டுமா என்பது சந்தேகமே.

### சொத்துக்கள்:

இவர்களுக்கு சொந்தமாக குறைந்தது இரு வீடுகளும் இரு கடைகளும் இருக்கின்றது. டக்னத்தில் ஒரு கடையும் வோல்தம்ஸ்ரோ பொறஸ்ற் றோட்டில் உள்ள வி ஜி சுப்பர்மாக்கறும் இவர்களுக்கு சொந்தமானது. இவ்விரு கடைகளுமே தற்போது குத்தகைக்கு விடப்பட்டு உள்ளது. இவற்றைவிட வோல்தம்ஸ்ரோவில் இவர்களுக்கு இரு வீடுகள் உள்ளது. ஒன்று அவர்கள் வசித்துவந்த வெலிங்ரன் றோட்டில் உள்ள வீடு. மற்றைய வீடு பொறஸ்ட் றோட்டில் உள்ளது. இதைவிட இவர்களுக்கு வேறு சொத்துக்கள் உள்ளதா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை.


REGISTER EXTRACT
Title Number : EGL129523
Address of Property : 16a Forest Road, Walthamstow
Price Stated : Not Available
Registered Owner(s) : KOTHANDAPANI CHANDRASEKARAN and VARADHARAJ VENKATASWAMY of 16a Forest Road, Walthamstow, London
Lender(s) : NATIONAL WESTMINSTER BANK PLC

### சீட்டுப் பிடித்தவர்களின் எதிர்காலம்:

தான் எப்படியும் பணத்தை மெல்ல மெல்லத் திருப்பித் தருவதாக அத் தம்பதிகள் உறுதியளித்து உள்ளனர். மேற்படி சொத்துக்கள் ஏற்கனவே Re-mortgage செய்யப்பட்டு இருந்தால் அதிலிருந்து கடன் பெறுவது சாத்தியப்படாது சொத்துக்களை விற்பதே ஒரே வழியாக இருக்கும்.

இவர்கள் Remortgage செய்து பணத்தை திருப்பித் தருவதாக கடந்த 2 வருடமாக கூறிக்கொண்டுள்ளனர் என்கிறார் பாதிக்கப்பட்ட ஒருவர். பாதிக்கப்பட்டவர்களின் பணத்தின் எதிர்காலம் தொடர்ந்தும் அந்தரத்தில் தொங்கப் போகின்றது.

## ரூற்றிங்கில் மோதலும் பதட்டமும்

ரூற்றிங்கில் இளைஞர்களிடையே மோதலும் பதட்டமும் ஏற்பட்டுள்ளது. பெப்ரவரி 12, 16 லும் மார்ச் நடுப்பகுதியிலும் மோதல்கள் இடம்பெற்றுள்ளது. மார்ச் சம்பவத்தில் குரொய்டன் பெஸ்ட்பூட் கடையில் வைத்து தமிழ் இளைஞர் ஒருவர் வெட்டப்பட்டுள்ளார்.

பெப்ரவரி 16ல் ரூற்றிங் மிச்சம் றோட்டில் அமைந்துள்ள மக்டோனால்ட்சில் உணவருந்திக் கொண்டிருந்த 25 வயதுடைய இளைஞர் தாக்கப்பட்டுள்ளார். சாமுரை வாள், ஹொக்கித் தடி போன்ற ஆயுதங்களுடன் நுழைந்த சில இளைஞர்கள் உணவருந்திக் கொண்டிருந்த இளைஞரைத் தாக்கி உள்ளனர்.

உணவகம் நிறைந்திருந்த மாலை 8:30 மணியளவில் குழந்தைகளுக்கும் பெற்றோருக்கும் முன்னிலையில் இத்தாக்குதல் இடம்பெற்றது. உணவு பிரிமாறும் பகுதியிலும் பின்னர் சமையலறைப் பக்கமாகவும் கலைத்துச் சென்று வெட்டிய பின் அல்லது பெஜொட் காரில் தப்பிச்சென்றுள்ளனர். இளைஞரின் தலையில் ஏற்பட்ட வெட்டுக் காயத்திற்கு 11 தையல் இடப்பட்டது.

பெப்ரவரி 12ல் ரூற்றிங் பொலிஸ் நிலையத்திற்கு முன் இடம்பெற்ற சம்பவத்தில் சாமுரை வாள், கிரிக்கட் பட் ஆகியவற்றால் தாக்கப்பட்டதில் 24 வயதுடைய இளைஞருக்கு தலையிலும் கையிலும் வெட்டுக்காயம் ஏற்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக தர்சன் குமாரசிங்கம், அருணன் தனபாலசிங்கம் ஆகியோர் கிங்ஸ்ரன் கிறவுண் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டனர்.

வொன்ஸ்வேத் பொலிஸ் பேச்சாளர் இது பற்றி தகவல் தெரிவிக்கையில் ரூற்றிங் பகுதியில் பொலிஸ் ரோந்து அதிகரிக்கப்பட்டு உள்ளதாகத் தெரிவித்தார்.

## புகைப்பிடித்தல் பழக்கமற்ற குழந்தைகளுடைய சிறிய காரை பயன்படுத்தம் குடும்பங்களுக்கு பட்ஜட் பிறவுண் விருந்து



மார்ச் 22, நிதியமைச்சர் கோடன் பிறவுண் தனது 10வது வரவு செலவுக் கணக்கை - பட்ஜட்டை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். கோர்டன் பிறவுணின் இந்த பட்ஜட் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்றே பொருளியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். பொதுத்துறைகளில் செலவிடுவதற்கு வேண்டிய பணம் இல்லாததால் பிச்சுப் பிடுங்கிச் செருகி ஒரு பட்ஜட்டை பிறவுண் தயாரித்துள்ளார் என்பதே பொதுவான கணிப்பாக உள்ளது. ஆயினும் கல்வியைப் பொறுத்தவரை இந்த பட்ஜட் ஒரு உந்துதலை வழங்கி உள்ளது.

### கல்வி:

பொதுவாக தனியார் பாடசாலைகளில் மாணவர்கள் கட்டணமாக ஆண்டுக்கு குறைந்தது £8000 செலுத்துகின்றனர். தற்போதைய பட்ஜட்டிலும் ஒவ்வொரு மாணவருக்கும் அரசு செலவிடும் தொகை £5000ல் இருந்து £8000மாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அடுத்த 5 ஆண்டுகளுக்கு பாடசாலைகளுக்கு £34 பில்லியன் பவுண்கள் ஒதுக்கப்பட்டு உள்ளது. இந்நிதி பாடசாலைகளின் தரத்தை உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### குழந்தைகள்:

குழந்தைகளுக்கான சேமிப்புத் திட்டத்திற்கு Child Trust Fund வழங்கப்படும் நிதி இரட்டிப்பாக்கப்பட்டு உள்ளது. ஏழ்மையில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு £500கள் சேமிப்புத் திட்டத்திற்கு வழங்கப்படவுள்ளது. ஏற்கனவே £250களைப் பெற்றவர்களுக்கு அக்குழந்தை ஏழு வயதாகும் போது மேலும் £250கள் வழங்கப்படும்.

மேலும் Child Tax Credit 14 வீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளது. இரு குழந்தைகளைக் கொண்ட குடும்பத்தினருக்கு வாரத்திற்கு £88 பவுண்கள் வழங்கப்படவுள்ளது.

### உயில்வரி:

inheritance taxஇன் வரிவிலக்கு £275,000ல் இருந்து £350,000ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. £350,000க்கு அதிகமாகும் தொகைக்கு 40 வீதம் வரிவிதிக்கப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளைக் கொண்டுள்ளவர்கள் தங்கள் மரணத்திற்குப் பின் சொத்துக்களை தம் வாரிசுகளுக்கு விட்டுச் செல்லும்போது இவ்வரி மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தும்.

### வீதிவரி - றோட் ரக்ஸ்:

சுற்றுச் சூழலுக்கு உகந்த சூழலை மாசுபடுத்தாத புதிய தொழில்நுட்பத்தைக் கொண்ட கார்களுக்கு வீதி வரியிலிருந்து முழுமையாக விலக்களிக்கப்பட்டு உள்ளது. சூழலை மாசுபடுத்தும் பொர்ட் கலக்சி, வொக்சொல் வெக்ரா மற்றும் 4X4 கார்களின் வீதிவரி

### சிகரெட் - குடிபானங்கள்:

20 உள்ள பக்கற் சிகரெட்டின் விலை 9 பென்சால் அதிகரிக்கப்பட்டு உள்ளது. வைன் 4 பென்சாலும், பியர் ஒரு பென்சாலும் அதிகரிக்கப்பட்டு உள்ளது.

# திருப்பி அனுப்பப்படுவது தவிர்க்க முடியாதது. 100 க்கும் மேற்பட்ட தமிழர்கள் திருப்பி அனுப்பப்படுகின்றனர் !

## தமிழ் சட்டவல்லுனர்கள் அச்சம்



மாதாந்தம் நூற்றுக்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் திருப்பி அனுப்பப்படுவதாக சட்டவல்லுனர்கள் தெரிவிக்கின்றனர். சட்டத்தரணி அ கனநாதன் (படம்: வலம்) இது பற்றிக் குறிப்பிடுகையில் நாளாந்தம் இலங்கைத் தமிழர்கள் திருப்பி அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றும் மாதாந்தம் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இவ்வாறு திருப்பி அனுப்பப்படுவதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக சட்டத்தரணி ரெங்கன் என் தேவராஜனிடம் (படம்: இடம்) கேட்ட போது நாளாந்தம் தமிழர்கள் திருப்பி அனுப்பப்படுவது உண்மையென்றும் ஆனால் குறித்த காலத்திற்குள் எத்தனை பேர் அனுப்பப்படுகிறார்கள் என்பது உறுதியாகத் தெரியவில்லை என்றும் தெரிவித்தார். அவர் மேலும் தொடர்கையில் இலங்கைத் தமிழர்கள் மட்டுமல்ல பொதுவாக தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்களைத் திருப்பி அனுப்ப வேண்டிய அழுத்தங்கள் அரசுக்குள்ளதாகக் கூறினார். மாதாந்தம் நூற்றுக்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் திருப்பி அனுப்பப்படுவதாக சட்டவல்லுனர்கள் தெரிவிக்கின்றனர்.

### உள்துறை அமைச்சு:

தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்களை திருப்பி அனுப்பும் விடயத்தில் உள்துறை அமைச்சு மந்தகதியில் செயற்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர்கள் குற்றம்சாட்டி உள்ளனர். மேலும் குடிவரவுத் திணைக்களம், பொலிஸ் போன்ற அரசியல் தஞ்ச விடயங்களில் தொடர்புடைய முகவர்களை ஒன்றிணைத்து திருப்பி அனுப்பப்படுவதை வேகப்படுத்த உள்துறை அமைச்சர் சார்ள்ஸ் கிளார்க் முயற்சிக்கின்றார்.

### தவிர்க்க முடியாதது:

தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்கள் திருப்பி அனுப்பப்படுவதற்கு முற்றுமுழுதாக சட்டத்தரணிகளை குறைசொல்ல முடியாது என்கிறார் சட்ட வல்லுனர் ராஜேஸ்குமார். அவர் மேலும் தெரிவிக்கையில் தற்போதைய தஞ்ச சட்ட விதிமுறைகளின் படி ஒரு நாட்டில் யுத்தம் நடைபெறுகிறது என்பது மட்டும் தஞ்சம் கோருவதற்கு போதுமானதல்ல என்று தெரிவித்தார். தஞ்சம் கோரியவர் தான் தனிப்பட்ட முறையில் பாதிக்கப்பட்டதற்கான ஆதாரங்களைக் கொண்டிருக்காவிட்டால்; தான் திருப்பி அனுப்பப்படும் பட்சத்தில் தனக்கு ஆபத்து எற்படும் என்பதை நிருபிக்கத்தவறும் பட்சத்தில்; அவர் திருப்பி அனுப்பப்படுவது தவிர்க்க முடியாதது என்றும் ராஜேஸ்குமார் தெரிவித்தார்.


உள்துறை அமைச்சின் இன்றைய சட்டவிதிகளுக்கமைய பெரும்பாலும் தஞ்சம் கோரிய இலங்கைத் தமிழர்கள் பொருளாதார அகதிகளாகவே கணிக்கப்படுகின்றனர் என்கிறார் ரெங்கன். அவர் மேலும் தெரிவிக்கையில் அரசியல் தஞ்சம் என்பது பிறப்புரிமையல்ல என்றும் இந்த நாடு எத்தனை குடிவரவாளர்களை அனுமதிக்க தீர்மானிக்கிறது என்பதைப் பொறுத்து அரசியல் தஞ்ச விண்ணப்பங்கள் அணுகப்படும் என்றார். அரசியல் தஞ்சம் என்பது அனைவருக்கும் பொதுவான பிரச்சினை இதில் சட்டத்தரணிகளும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கே பயனளிப்பார்கள்; இந்த உண்மையை தமிழ் சமூகம் உணர வேண்டும் எனவும் ரெங்கன் என் தேவராஜன் தெரிவித்தார். இன்றைய நிலையில் பெரும்பாலான இலங்கைத் தமிழர்கள் திருப்பி அனுப்பப்படுவதை தடுத்து நிறுத்துவது இயலாத ஒன்றாகவே இருக்கும் என்றார் அவர்.

# சீட்டும் சீரழிவும்

## வோல்தம்ஸ்ரோ சீட்டுத் தம்பதிகள் தலைமறைவு




செய்தி: கொ றநின்




வோல்தம்ஸ்ரோவில் நீண்ட காலம் சீட்டுப் பிடித்து வந்த துரையண்ணை என்று அறியப்பட்ட துரைரட்ணம் முத்துசாமி சந்திராக்கா என்று அறியப்பட்ட துரைரட்ணம் வசந்தாதேவி இருவரும் அண்மைக்காலமாக தலைமறைவாகி உள்ளனர். கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக சீட்டு, வட்டிக்குக் கொடுத்தல், கடை என வோல்தம்ஸ்ரோவில் நன்கு அறியப்பட்ட இத்தம்பதிகள் தற்போது பெரும் நிதி நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளதாகத் தெரியவருகிறது. இவர்களிடம் சீட்டுக் கட்டிய பலர் தினமும் இவர்களது வீட்டை சுற்றி வளைக்கின்றனர்.

### தலைமறைவு:

இவர்களால் நடத்தப்பட்டு வந்த காமதேனு கடை (வி ஜி சுப்பர்மாக்கற்) சில மாதங்களுக்கு முன்பிருந்து குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. அவ்வளவு காலமும் அவர்களிடம் கடை இருக்கிறது ஆகையால் பணத்தை கொஞ்சம் கொஞ்சமாக மீட்கலாம் என்று நம்பி இருந்த பலருக்கும் கடை கைமாறியது இருந்த கொஞ்ச நம்பிக்கையையும் இல்லாமற் செய்துள்ள்து. கடைக்கு வந்து பணத்தை கேட்டவர்கள் நேரடியாக வீட்டிற்கு செல்லத் தொடங்கியதும் இத்தம்பதிகள் தலைமறைவாகி உள்ளனர்.



TITLE NUMBER : EGL14530
B PROPRIETORSHIP REGISTER

This register specifies the class of title and identifies the owner. It contains any entries that affect the right of disposal.

TITLE ABSOLUTE

1 (25.06.1997) Proprietor: MUTHUSAMY THURAIRATNAM and VASANTHADEVY THURAIRATNAM of 54 Wellington Road, Walthamstow, London E17 6LZ

2 (25.06.1997) RESTRICTION: No disposition by a sole proprietor of the land (not being a trust corporation) under which capital money arises is to be registered except under an order of the registrar or of the Court.

3 (25.06.1997) The transfer to the proprietor contains a covenant to observe and perform the covenants referred to in the Charges Register and of indemnity in respect thereof.

END OF B REGISTER

இவர்கள் பற்றிய விபரத்தை அறிய அவர்கள் நடத்திய கடைக்குச் சென்ற போது புதிய நிர்வாகத்தினர் தமக்கு அவர்கள் தங்கி இருக்கும் இடம் தெரியாது எனத் தெரிவித்தனர். அருகில் விடியோ கடையை நடாத்திவரும் சந்திராவின் சகோதரரிடம் அவரைப் பற்றி விசாரித்த போது அவரும் தனக்குத் தெரியாது எனக் கை விரித்தார். ஆனால் தன்னை சகோதரி இடைக்கிடை சந்திப்பா எனவும் தான் அவருக்கு தகவல் தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்தார். எமது தொடர்பிலக்கத்தை வழங்கி வந்தோம் ஆனால் இச்செய்தி பதிப்பிற்கு செல்லும் வரை அத்தம்பதிகள் எம்முடன் தொடர்புகொள்ளவில்லை.

### சீட்டு:

இத்தம்பதிகள் 10 வரையான சீட்டை நடாத்தி வந்தனர். இதில் வர்த்தகர்கள் பங்குபெறும் பெரிய தொகையான சீட்டுக்களும் அடங்கியுள்ளது. ஆனால் இவர்கள் கடந்த சில ஆண்டுகளாக நிதி நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். ஆயினும் இவர்கள் குறைந்த வட்டிக்கு பணத்தைப் பெற்று கூடிய வட்டிக்கு வழங்கும் இடைத்தரகர் வேலையிலும் ஈடுபட்டிருந்தனர். புதிய சீட்டுக்களையும் ஆரம்பித்து நடத்தினர். இதனால் இவர்களிடம் தொடர்ச்சியான பணப்புரள்வு இருந்துள்ளது. ஒருவாறு சமாளித்து வந்துள்ளனர். தற்போது நிலைமை கை மீறிச் சென்றுள்ளது.

சீட்டைப் பொறுத்தவரை சீட்டு முடிந்தும் பலருக்கு சீட்டுப் பணம் வழங்கப்படவில்லை. இத்தொகை ஆயிரம் முதல் 30,000 பவுண் வரை வழங்கப்பட வேண்டிய நிலையிலுள்ளது. சிலருக்கு கடந்த மூன்றாண்டுகளாக சீட்டுப்பணம் வழங்கப்படவில்லை. இன்னும் சிலர் நிலைமையை கேள்வியுற்று தமது சீட்டை இடைநிறுத்தினர். அதனால் அதுவரை கட்டப்பட்ட தொகையை மீளளிக்க வேண்டும் அவ்வாறானவர்களின் பணமும் அப்படியே செலுத்தப்படாமால் உள்ளது.

### வட்டி:

இதற்கிடையே பெரும் வர்த்தகப் புள்ளிகளும் இவர்களுக்கு வட்டிக்கு பணம் வழங்கி உள்ளனர். இப்பணம் கூடிய வட்டிக்கு வேறாட்களுக்கு வழங்கப்பட்டதா அல்லது அவர்களது தேவைக்கே

( தொடர்ச்சி 2ம் பக்கத்தில்)

K SHAN BUILDERS
BUILDING CONTRACTORS

For your home needs:
Roofing, Extension, Flooring, Wiring, Plumbing, Central Heating, Carpentry, Brickwork, Driveways, Decorating, Painting, Kitchen and Bathroom Fitting



Contact K. Shan:
Tel: 020 8478 3587
Mob: 07949 703 431
Email: shalanda2003@yahoo.com




Advocates - Lawyers - Solicitors
Specialise in Buy & Sell Off-Licence shops & Resturants Including Alcohol Licensing
அற்ககோல் லைசன்ஸ் உட்பட ஓப் லைசன்ஸ் கடைகளையும் உணவகங்களையும் வாங்குவதிலும் விற்பதிலும் தேர்ச்சி பெற்றவர்கள்.
also Immigration, Conveyancing, Divorce, Wills & Probate, Civil Litigation
020 8206 3530
595 Kenton Rd, kenton, Middlesex HA3 9RT
Alliance SOLICITORS
www.alliance-solicitors.com

# £300,000 விளையாட்டரங்கம் கட்ட லண்டனில் நிதி சேகரிப்பு


வடக்கு கிழக்கு விளையாட்டுக் கல்லூரிக்கு £300,000 பவுண்களை சேர்க்கும் பணியில் TSSA-UK (தமிழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் - UK) இறங்கி உள்ளது. 1.4மில்லியன் பவுண்களுக்கு அதிகமான செலவில் கிளிநொச்சியில் அமையவிருக்கும் பிரமாண்டமான விளையாட்டுக் கல்லூரிக்கு £300,000 சேர்க்கும் பணியை லண்டனில் இயங்கிவரும் தமிழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் (TSSA - UK) பொறுப்பேற்றுள்ளது. இதில் £30,000 பவுண்கள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ்விளையாட்டுக் கல்லூரிக்கு நிதி மற்றும் உதவிகளை பெற்றுக் கொள்வதற்காக யாழ் மாவட்ட விளையாட்டு அதிகாரி ரோகான் ராஜசிங்கம் லண்டனுக்கு வருகை தந்து 25.02.06 பத்திரிகை மாநாடு ஒன்றை நடாத்தினார். கிளிநொச்சியில் ஆரம்பமாகியுள்ள இப்பிரமாண்டமான விளையாட்டுக் கல்லூரி திட்டத்தை நிர்வகிக்க லண்டனில் TSSA அமைப்பின் கீழ் எஸ் சிறிரஞ்சன் தலைமையின் கீழ் உபகுழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சியில் கட்டப்படும் இக்கல்லூரியின் செயற்குழுவின் தலைவராக தமிழீழ விடுதலைப் புலிகளின் விளையாட்டுத் துறை பொறுப்பதிகாரி பாப்பா விடுதலைப் புலிகளினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

Sports Academy for North East (SANE) என்ற இவ்வமைப்பு இலங்கையில் அரசசார்பற்ற ஸ்தாபனமாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக (NHO) இப்பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. இவ்விளையாட்டுக் கல்லூரி அமைவதற்குரிய 52 ஏக்கர் நிலப்பரப்பை இலங்கை அரசாங்கம் ஒதுக்கி உள்ளதாகவும் இவ்வேலைத்திட்டம் தற்போதைய பேச்சுவார்த்தை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்பே உயிர்பெற்றதாக திரு ரோகான் ராஜசிங்கம் தெரிவித்தார்.



தான் கல்வி கற்ற யூனியன் கல்லூரிக்கு விஜயம் செய்த திருமதி தம்பிப்பிள்ளை விளையாட்டு விராங்கனைகளுடன்




செப்ரம்பர் 2007 ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ள (முதற்கட்டம்) இக்கல்லூரிக்கு லண்டன் வாழ் தமிழர்களிடம் இருந்து நிதி எதிர்பார்க்கப்படுகின்றது. போரின் அனர்த்தத்தினால் வடக்கு கிழக்கு மாகாண மாணவர்களின் விளையாட்டுத்திறமை மிகவும் மழுங்கடிக்கப்பட்டு உள்ளதால் விளையாட்டுத்துறைக்கு பணம் சேகரிப்பது இலகுவான காரியம் அல்ல என TSSA தலைவர் மயில்வாகனம் தனது பேச்சின் போது தெரிவித்தார்.

இத்திட்டத்திற்கான நிதியை சேகரிக்க TSSA எவ்வாறான திட்டங்களை வைத்துள்ளது, சேகரிக்கப்படும் நிதி முழுமையாக அத்திட்டத்திற்கே பயன்படுத்தப்படுமா போன்ற கேள்விகள் இச்சந்திப்பில் எழுப்பப்பட்டது.

**மு சிவராஜா தலைமையில் பெப்ரவரி 23ல் வெம்பிளி பகுதி தமிழ் பொலிஸ் ஆலோசனைக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட சில படங்கள்**





IAGல் கலந்து கொண்ட,புதிதாக நியமனம் பெற்ற பொலிஸ் அலுவலர்

## ஈலிங் அம்மன் அறங்காவலர்கள் - ஆர் ஜெயதேவன் முயற்சி

# கருணலிங்கம் வெளியேற்றப்பட்டார்



செய்தித்தொகுப்பு : த ஜெயபாலன்

முன்னாள் ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலய நிர்வாகத் தலைவர் கருணலிங்கம் தற்போது வெளியேற்றப்பட்டு உள்ளார். தன்னை அடுத்த 5 ஆண்டுகளுக்கு தேர்தலில் போட்டியிடாமல் செய்வதற்கான தீவிர முயற்சி இடம்பெறுவதாக கருணலிங்கம் தெரிவித்தார். தன்னை வெளியேற்ற ஜெயதேவன் போட்ட திட்டத்தில் ஈலிங் அறங்காவல் சபையின் சில உறுப்பினர்களும் எதிரணியினரும் கூட்டாக ஈடுபட்டுள்ளதாக தாம் நம்புவதாக கருணலிங்கம் தெரிவித்தார். கருணலிங்கத்தை வெளியேற்றும் திட்டம் ஜெயதேவனுடையது என்பதைத்தான் உறுதியாக நம்புவதாக முன்னாள் ஈழபதீஸ்வரர் ஆலயத் தலைவர் சிவராஜா உதயனுக்குத் தெரிவித்தார்.

## ஜெயதேவன் பதில்:

இது தொடர்பாக ஆர் ஜெயதேவனுடன் தொடர்பு கொண்ட போது ஈலிங் ஆலயத்தின் தலைவராக இருந்த பொழுது கருணலிங்கம் தனது எல்லைகளை மீறி எங்கள் கோயிலில் (ஈழபதீஸ்வரர் ஆலயம்) தலையிட்டதாகக குற்றம்சாட்டினார்.

தான் வெளியேற்றப்பட்டதற்கு எங்களை குற்றம்சாட்டுவதற்குப் பதிலாக அவர் கடவுளைத்தான் குற்றம்சாட்ட வேண்டும் ஏனெனில் ஆலயத்திற்கு வெற்றிகரமாக சேவை செய்தும் கடவுள் அவரைக் காப்பாற்றவில்லை என்று ஜெயதேவன் தெரிவித்தார்.

தான் அம்மன் ஆலயத்தின் உறுப்பினராக இருந்து வெளியேறியதாகக் கூறும் ஜெயதேவன் தனது நண்பர்கள் ஓரிருவரிடம் கருணலிங்கத்தைப் பற்றிய ஆதங்கத்தை வெளிப்படுத்தியதாகவும் செயற்பாட்டுக் குழுவிற்கு கருணலிங்கம் பற்றி எழுதியதாகவும் அதைவிட தான் எதுவும் செய்யவில்லை என்று குறிப்பிட்டார்.

மதிவதனி பிரபாகரனின் குடும்ப உறவால் கருணலிங்கத்திற்கு ரிரிஎன் இல் வேலை கிடைத்துள்ளதாக குறிப்பிட்ட ஜெயதேவன், முதலைக் கண்ணீர் விடுவதை நிறுத்திவிட்டு ஆலயத்தால் கிடைத்த வேலையை செய்யட்டும் என்றார். மேலும் ஈழபதீஸ்வரர் ஆலயத்தில் கஸ்பார் அடிகளார் பேசுவதை தடுக்க ஹீத்ரோ விமான நிலையத்தில் வைத்து அவரை கருணலிங்கம் மபியா பாணியில் கடத்திச் சென்றதை தான் மறக்கவில்லை என்பதை கருணலிங்கத்திடம் தெரிவிக்குமாறு ஜெயதேவன் கேட்டுக்கொண்டார்.

## கருணைலிங்கம், ஜெயதேவன் பகை:

ஓகஸ்ட் 2003ல் மு சிவராஜா ஈழபதீஸ்வரர் ஆலயத்தை மீண்டும் தனது நிர்வாகத்திற்குள் கொண்டுவர முயற்சி எடுத்த போது கருணலிங்கம் தனது ஆதரவை சிவராஜாவுக்கு வழங்கி இருந்தார். அதற்காக நடத்தப்பட்ட கூட்டத்திலும் கருணலிங்கம் கலந்து கொண்டிருந்தார். இதுவே கருணலிங்கத்திற்கும் ஜெயதேவனுக்கும் பகைமை ஏற்படக் காரணமானது. அப்போது கருணலிங்கம் வெளியேற்றப்படுவார் என ஜெயதேவன் தனது சகாக்களிடம் உறுதியாகத் தெரிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்து ஈழபதீஸ்வரர் ஆலயத்தில் தலையீடு செய்வதைக் கண்டித்து வெளிவந்த கருணலிங்த்திற்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் எதிரான துண்டுப் பிரசுரங்கள் ஈலிங் அம்மன் ஆலயத்திலும் விநியோகிக்கப்பட்டிருந்தது. சவுத்தோல் சிவணேசன் என்ற பெயரில் தொடர்ச்சியாக சில பிரசுரங்கள் வெளிவந்தது.



ஆலயத்திலிருந்து வெளியேற்றப்பட்ட கருணலிங்கம்

## அறங்காவலர்கள் ஒத்துழைப்பு:

இது தொடர்பாக அறங்காவல் சபைக்கு நெருக்கமான நிரந்தர உறுப்பினர் ஒருவரிடம் யார் இந்த சவுத்தோல் சிவணேசன்? என உதயன் நிருபர் கேட்டபோது 'எங்களுக்கு யார் அடிக்கிறார்கள் என்று தெரியும். அதனை நிப்பாட்டவும் முடியும்' என்று பதிலளித்தார்.

ஜெயதேவன் தற்போது நெருக்கமாகச் செயற்படும் ரிபிசி வானொலி கருணலிங்கம் வெளியேற்றப்படுவார் என்பதை எதிர்வு கூறி இருந்தது. மேலும் கருணலிங்கம் 5 ஆண்டுகளுக்கு நெருங்க முடியாது எனவும் கூறியிருந்தது.

## கருணலிங்கத்தின் தலைமை:

நான்கு தடவைகள் தொடர்ச்சியாக வெற்றி பெற்று ஈலிங் அம்மன் ஆலயத்தின் நிர்வாகத் தலைவராக கருணலிங்கம் இருந்துள்ளார். இவரது காலகட்டத்தில் தான் தாயகப் பகுதிகளில் அனாதை இல்லங்களைப் பராமரிப்பது, கணனி வகுப்புகளை நடத்துவது போன்ற முக்கிய பணிகளில் ஈலிங் அம்மன் ஆலயம் ஈடுபட்டது. லண்டன் ஈலிங் அம்மன் ஆலயத்தின் பெயர் தாயகத்திலும் பிரபல்யம் அடைந்தது. ஈலிங் அம்மன் ஆலயத்தின் முன்மாதிரியை ஏனைய ஆலயங்களும் பின்பற்றின. தாயகத்திற்கு உதவி செய்வதுடன் நில்லாது லண்டனிலும் கலை, இலக்கிய நிகழ்ச்சிகளுக்கு ஆலய மண்டபத்தை இலவசமாக வழங்கியும் உணவு தயாரித்து வழங்கியும் ஆலயம் மக்கள் சேவையில் ஈடுபட்டது. ஆலயத்தின் கணக்கு விபரங்கள் மக்கள் பார்வையிடும் வகையில் வைக்கப்பட்டது. ஆலயத்தின் நன்மதிப்பும் உயர்ந்தது. நன்மதிப்புடன் கருணலிங்கத்தின் பெயரும் நன்மதிப்பும் உயர்ந்தது. அதுவே கருணலிங்கத்திற்கு எதிரான பொறாமை உணர்வு வளரவும் உட்பூசலுக்கும் காரணமானது.

## ஆலய நிர்வாகத்தில் உட்பூசல்:

இதுவே உட்பூசல்களுக்கும் காரணமானது. தேர்தல் மூலம் கருணலிங்கத்தை தோற்கடிக்க முடியாத எதிரணி அறங்காவல் சபையுடன் இணைந்து (ஜெயதேவனுடனும் இணைந்து என்று நம்பப்படுகிறது) கருணலிங்கத்தின் நிர்வாகத்தை கவிழ்த்தது. தற்போது ஓராண்டுக்கு மேலாகத் தேர்தல்கள் எதுவும் நடைபெறவில்லை.

மேலும் அடுத்த தேர்தலில் கருணலிங்கம் நின்றால் மீண்டும் வெற்றி பெறுவது நிச்சயம் என்பதால் ஆலய அறங்காவல் சபை தேர்தலை நடத்தாமல் இழுத்தடித்து வருகின்றது என்கிறார் கருணலிங்கத்தின் நண்பர் கோபால். அத்துடன் தேர்தல் நடக்கும் பட்சத்தில் அதில் கருணலிங்கத்தை போட்டியிடவிடாமல் செய்வதிலும் அறங்காவல் சபை கண்ணும் கருத்துமாக இருப்பதாக ஆலய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. குறைந்தது 5 ஆண்டுகளுக்காவது ஒதுக்கி வைப்பதன் மூலம் கருணலிங்கத்தின் செல்வாக்கை வீழ்ச்சி அடையச்செய்யலாம் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# சீட்டு : ஒரு நோக்கு

இந்தியா, பங்களாதேஸ், பாகிஸ்தான், இலங்கைச் சமூகங்களிடையே வெவ்வேறு வடிவங்களில் இச்சீட்டு முறை நடைமுறையில் உள்ளது. கிராமிய சேமிப்புப் பழக்கமான இந்தச் சீட்டு அம்மக்களின் புலம்பெயர்வுடன் சேர்ந்து மேற்கு நாடுகளுக்கும் பரவியது. சிக்கலான வங்கி நடைமுறைகளுடன் ஒப்பிடுகையில் சீட்டு பிடிப்பது இலகுவானதும் பலனளிக்கக் கூடியதுமாக இருந்தபடியால் தமிழர்கள் பலரும் அதில் ஈடுபட்டனர். ஆரம்பத்தில் மிக நெருங்கிய நம்பிக்கையானவர்கள் மத்தியில் ஆரம்பித்து பின்னர் வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் நண்பர்கள் என வட்டம் பெரிதானது.

வியாபாரத்தை நம்பி சீட்டு பிடிப்பவர்கள் வியாபரத்தின் ஏற்ற இறக்கங்களை மதிப்பிடாமல் இறுதியில் உடைந்து போகின்றனர். தமது நிதி நிலைமைகளை மதிப்பிடாமல் சீட்டைக் கட்டி பெருத்த கழிவுடன் எடுத்து அப்போதைய பிரச்சினையை மட்டும் தீர்த்துவிட்டு பின்னர் சீட்டைக் கட்ட திண்டாடுகின்றனர். ஒரு சீட்டில் ஒருவர் பணத்தை எடுத்துவிட்டு சீட்டை கட்டாமல் போகும் போதே சீட்டை பிடித்தவர் ஆடிப் போய்விடுவார். முதல் சீட்டு அவர்களுக்கு என்பதால் பணம் தேவைப்படும் போது சீட்டுப் பிடிப்பவர்கள் ஒரு சீட்டைத் தொடங்கி பணத்தை எடுத்து வட்டிக்கு விடுகின்றனர் அல்லது தமது வியாபாரத்தில் முதலிடுகின்றனர். இவற்றிலிருந்து பணம் வருவது சறுக்கும் போது இவர்களை நம்பி சீட்டுப் பிடித்தவர்களின் நிலை ஈடாடுகிறது.


கிராமிய நிலையில் ஒரு சிறு பிரிவினர் சிறய அளவில் இதனை மேற்கொள்ளும் போது அங்கு பாதிப்புகள் ஏற்படுவதில்லை. வங்கி நடைமுறைகள் இல்லாத கிராமப் பகுதிகளில் இது ஒரு வரவேற்கத் தக்க சேமிப்பு முறை. ஆனால் மனிதர்கள் வேகமாக நகரும் மனிதர்களை மதிப்பிட முடியாத மேற்குலகில் வெறும் நம்பிக்கையின் அடிப்படையில் சீட்டு போன்ற செயன்முறைகள் மிகவும் ஆபத்தானது. அதுவும் இயல்புக்கு மீறிய தொகைப் பணத்தைக் கையாள்வது மிக மிக அபத்தானது.

மேற்குலக நாடுகளில் தஞ்சமடைந்த தமிழ் சமூகத்தின் மத்தியில் வன்முறை பெரும்பாலும் சீட்டை மையப்படுத்தியே ஆரம்பிக்கப்பட்டது. சுவிஸ், பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளில் சீட்டுபிடித்த பலர் அங்கு சீட்டைக் கைவிட்டு விட்டு அங்கிருந்த பணத்தைக் கொண்டுவந்து லண்டனிலும் கனடாவிலும் முதலிட்டு உள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் வன்முறையில் இறங்கிய சம்பவங்கள் பல. உச்சகட்டமாக கொலையும் இடம்பெற்றுள்ளது.

இவ்விதழில் குறிப்பிடப்பட்ட தம்பதிகளின் வாகனம் சேதமாக்கப்பட்டு உள்ளது. ஆத்திரமடைந்த சிலர் வீட்டிற்கு வந்து சத்தம் போடவே பொலிசார் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

பணம் என்பது ஒன்றுடன் ஒன்று தொடுக்கப்பட்டதால் சங்கிலித் தொடராக பல குடும்பங்கள் இதனால் பாதிக்கப்பட்டு உள்ளன. சீட்டு கட்டுபவர்களும் பல்வேறு கஷ்டங்களின் மத்தியிலேயே அதனை கட்டுகின்றனர்.கடைசியாக அல்லது கடைசிக்கு அண்மையாக எடுக்கலாம் என்றிருக்கையில் அவர்களது பல்லாயிரம் சேமிப்பு மண்ணாகிப் போகும் போது அவர்கள் மனஉளைச்சலுக்கு உள்ளாகின்றனர். குடும்பத்தின் நிம்மதி இழக்கப்படுகிறது. சீட்டுப் பிடித்தவர்களும் பழிச்சொல்லுக்கு ஆளாகின்றனர். சிலர் உண்மையிலேயே திட்டமிட்டு மோசடி செய்கின்றனர். சிலர் நிர்வாகத் திறமையின்மையால் அப்பொறிக்குள் வீழ்கின்றனர். இவர்களின் நிலையும் பரிதாபத்திற்குரியதே. ஆனால் சீட்டுகட்டியவர்களைப் பொறுத்தவரை அவர்கள் தாம் திட்டமிட்டு ஏமாற்றப்பட்டுவிட்டோம் என்ற உணர்வே எப்போதும் மோலொங்கி நிற்கும்.

# அமரர் ஸ்ரானிஸ்லோ நினைவுகள்



அமரர் ஸ்ரானிஸ்லோவின் மறைவிற்கு லண்ட தமிழர்களும் தமிழ் அமைப்புகளம் தமது ஆழ்ந்த அனுதாபத்தை வெளியிட்டன. பெப்ரவரி 3ல் காலமான சவரிமுத்து ஸ்ரானிஸ்லோ 1990 முதல் தென் இலண்டன் தமிழர் நலன்புரி அமைப்பில் இணைந்து பணியாற்றி 1994ல் அதன் தலைவரானார். அரசியல் தஞ்ச விடயங்களில் அழமான அனுபவமும் அறிவும் கொண்ட ஸ்ரானிஸ்லோ தமிழ் அகதிகளின் நலனகளுக்காக நீண்டகாலம் போராடி வந்தவர்.

மறக்கப்பட்ட மக்களை கருத்தில் எடுத்து அவர்களது வாழக்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் சமூக, பொருளாதார விடயங்களில் உதவுவதும் அதற்கு ஆலோசனைகளையும் ஆதரவையும் வழங்குவதையும் ஸ்ரானிஸ்லோ தனது கடமையாகக் கொண்டிருந்தார் என தங்கள் அஞ்சலியில் தென் இலண்டன் தமிழர் நலன்பரி அமைப்புத் தெரிவித்துள்ளது. இவர் இவ்வலகை நீங்கிச் சென்றபோதும் அவருடைய சேவைகளுக்கூடாக அவர் வாழ்வதாகவும் அவ்வஞ்சலியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் தஞ்ச விடயங்களில் இவருக்கிருந்த அனுபவம், திறமையால் இவர் Refugee Council இன் ரஸ்டியாக நியமிக்கப்பட்டார். உள்துறை அமைச்சின் National Asylum Support Forum, Office of the Immigration Services Commissioner ஆகியவற்றின் அலோசனைக் குழுக்களிலும் ஸ்ரானிஸ்லோ அங்கம் வகித்தது குறிப்பிடத்தக்கது. வேறு அமைப்புகளிலும் இணைந்து தனது அனுபவங்களை அவர் வழங்கி இருந்தார். இவருடைய சேவையை பாராட்டி பிரித்தானிய அரசின் அதியுயர் விருது MBE இவருக்கு 2003ல் வழங்கப்பட்டது.

## செக் கொடுத்த வீட்டுக்காரர் தலைமறைவு
# வீட்டுக்கு சீல்

நண்பருக்கு உதவும் நோக்கில் வர்த்தகர் ஒருவர் வைப்பிலிடப்பட்ட காசோலை இறுதியில் உபத்திரவத்தில் முடிந்துள்ளது. திரிசா அமிர்தலிங்கம் என்ற இரு குழந்தைகளின் தாயாரே அந்தக் காசோலையை நண்பருக்கு வழங்கியதாகவும் அவருடைய வீட்டுக்கு விசாரிப்பதற்கு சென்றால் வீடு பொலிசாரினால் சீல் வைக்கப்பட்டு உள்ளதாகவும் ஏமாற்றத்துடன் உதயனுக்குத் தெரிவித்தார் அவ்விளம் வர்த்தகர்.

நண்பர் ஒருவர் தந்த காசோலையை வங்கியில் போட்டதால் வர்த்தகர் ஒருவரின் வங்கிக் கணக்கு தற்காலிகமாகச் செயலிழக்கச் செய்யப்பட்டது. இந்நிலை எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் என்பதும் தெரிவிக்கப்படவில்லை. விசாரணைகள் முடிவடைந்த் பின்னரே வங்கிக் கணக்கை செயற்படுத்த முடியமென வங்கி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தஞ்சம் நிராகரிக்கப்பட்ட நிலையில் வங்கிக் கணக்கை கொண்டிராத நண்பர் ஒருவர் கொடுத்த £5000 காசோலையை தனது நண்பருக்கு மாற்றிக் கொடுக்கும் நோக்கில் வோல்தம்ஸ்ரோவில் கடை வைத்திருக்கும் தமிழ் வர்த்தகர் தனது வங்கிக் கணக்கில் போட்டுள்ளார். ஆனால் அக்காசோலை களவாடப்பட்டதாக வங்கியில் பதிவு செய்யப்பட்டிருந்துள்ளது. களவாடப்பட்ட காசோலை வர்த்தகரின் வங்கிக் கணக்கில் வைப்பிடப்பட்டதும் வங்கி நிர்வாகம் வர்த்தகரின் வங்கிக் கணக்கை செயலிழக்கச் செய்தது. அவ்வங்கிக் கணக்கினூடாக பணமாற்றம் ஆகியவற்றையும் செய்து வந்த வர்த்தகரின் நாளாந்த வர்த்தக நடவடிக்கைகள் குழப்பமடைந்தது.

வோல்தம்ஸ்ரொவில் உள்ள திரிசா அமிர்தலிங்கம் விசா பெற்றுத் தருவதாகக் கூறி சிலரிடம் பணம் வாங்கியதாக அப்பகுதியில் சிலர் குற்றம்சாட்டுகின்றனர். ஆனால் இது தொடர்பாக திரிசாவிடம் தொடர்புகொள்ள எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை.


# சூடு பிடிக்கும் உள்ளாட்சித் தேரதல் களம்

மே 4ல் இடம்பெறவுள்ள உள்ளாட்சித் தேர்தல் களம் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. ஏற்கனவே கவுன்சிலர்களாக பணியாற்றிய வர்கள் மீண்டும் களமிறங்குகின்றனர். அவர்களுடன் இம்முறை புதிய முகங்கள் சிலவும் களத்தில் குதிக்க உள்ளனர். லண்டனில் 50 கவுன்சிலர்களையாவது தெரிவு செய்யக்கூடிய வாக்குப் பலம் தமிழர்களிடம் இருந்த போதும் 6 தமிழ் கவுன்சிலர்களே உள்ளனர்.

போல் சத்தியநேசன், மைக் செல்வா, தயா இடைக்காடர், மனோ தர்மராஜா ஆகியோர் தொழிற்கட்சியிலும் செல்வி எலிசா மான்ன், யோகநாதன் ஆகியோர் லிபரல் டெமகிரட் கட்சியிலும் கருப்பையா செல்வராஜா கொன்சவேடிவ் கட்சியிலும் தெரிவாகினர். இவர்கள் பெரும்பாலும் மீண்டும் களமிறங்க உள்ளனர். அவர்களுடன் லண்டன் பாபா திரு திருமதி சுரேஸ், அப்பாத்துரை ஜெயரஞ்சன், பரமகுமார், கருணலிங்கம் ஆகியோரும் இம்முறை களமிறங்கி உள்ளனர். ஈஸ்ற்ஹாமில் கொன்சவேடிவ் கட்சியின் சார்பில் ராஜ்குமார், திருமதி இந்திரகுமார் ஆகியோர் களமிறங்கி உள்ளன்ர். மேலும் ஒரு தமிழர் சுயேட்சையாக நிற்பதாகத் தெரியவருகிறது. ஹரோ பகுதியில் இரு இலங்கை முஸ்லீம் வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

தமிழர்கள் வாக்களிக் காமல் இருப்பது அவர்களது பிரதிநிதித்துவத்தை வெகுவாகப் பாதிக்கும். ஆகவே தமிழர்கள் தம் வாக்குகளை பயன்படுத்தவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 10 வயது இரட்டையர்கள்
## GCSE பரீட்சையில் வெற்றி




10 வயதில் GCSE பரீட்சையில் தோற்றி அனிதா, அருன் விக்னேஸ்வரன் இரட்டையர்கள் தகவல் தொழில்நுட்பம் - Inforfation Technologyல் C எடுத்துள்ளனர். தங்கள் பிள்ளைகள் கடந்த 2 ஆண்டுகளாக கணித ஆசிரியர் பாலசிங்கம் விக்னேஸ்வரனின் றைட்ஸ் சர்ரடே ஸ்கூலுக்கு செல்வதாகக் குறிப்பிட்டார்.

றொனால்ட் றைட்டினால் ஆரம்பிக்கப் பட்ட இப்பாடசாலை சிறுவயது மாணவர்களை GCSE பரீட்சையில் தோற்ற வைத்து வருகிறது. இப்போது றைட்டினுடைய மகன் சிறுவயது மாணவர்களை சித்தியடைய வைப்பதற்கு கற்பித்து வருகிறார்.

# அடிப்படைச் சம்பளம் உயர்கிறது

பிரித்தானியாவில் அடிப்படைச் சம்பளம் 30 பென்ஸ்களால் உயரவுள்ளது. இப்போது மணித் தியாளத்திகு £5.05 ஆகவுள்ள அடிப்படைச் சம்பளம் இவ்வாண்டு ஒக்ரொபர் முதல் £5.35 ஆக உயர்கிறது.

இவ்வுயர்வால் 1.3 மில்லியன் தொழிலாளர்கள் பயனடைய உள்ளனர். கடந்த ஆண்டு இதனை Low Pay Commission அரசுக்கு அறிவுறுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. பிரித்தானிய பொருளாதாரம் உறுதியாக இருப்பதாலும் புதிய வேலை வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளதாலும் இவ்வுயர்வை அரசு அனுமதித்துள்ளது.

18 - 21 வயதுடையவர்களின் சம்பளம் 20 பென்சால் £4.45 ஆகவும் 16 - 17 வயதுடையவர் களின் சம்பளம் 30 பென்சால் £3.30 ஆகவும் அதிகரித்துள்ளது.

1999ல் அடிப்படைச் சம்பளம் அறிமுகப்படுத்தப்பட்ட போது £3.60 இருந்து ஒவ்வொர் ஆண்டும் அதிகரிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

LOCAL COMMUNITY HOUSING
FINANCIAL SERVICES
*Are you having problems getting a mortgage (Mortgage Declined? We can help)*




- No Income Proof
- CCJs & Defaults Up To 95%
- Loan / Mortgage Arrears
- 100% Mortgage Available
- Self Certificate Available (up to 90%) LTV
- Self Employed or Employed
- Discharged Bankrupts
- Council RTB 100% (inc. adverse)
- Buy to Let or Let to Buy
- Buy to Let Foreign Nationals
- Commercial Mortgage Arranged
- Secure Loans
- Principle Offer Within 24hrs (subject to status)
- All Type Of Property Insurance Available

FOR AN IMMEDIATE DECISION CALL THE MORTGAGE SPECIALIST ON
Tel: 020 8980 2121
Mob: 07956 914 735
Fax: 020 8980 8966
email: thiruprabaharan@hotmail.com
Consultation ask for Mr.Prabaharan
153/159 Bow Road, London E3 2SE
Your home is at risk if you do not keep up payment on a mortgage or other loan secured on it




Unbeatable prices & Quality
Call for free quote
Windows make houses
REHAU
Window design


# திருப்பி அனுப்புவதை நிறுத்தக்கோரி தமிழர்கள் Trafalgar Squareல் ஆர்ப்பாட்டம்



அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்கு எதிராக லண்டன் ரபல்கர் ஸ்கயரில் அமைதிப் போராட்டம் ஒன்று இடம்பெற்றது. மார்ச் 19, காலை 11:00 முதல் மாலை 3:00 இடம்பெற்ற இப்போராட்டத்தில் அகதிகளைத் திருப்பி அனுப்பவதற்கு எதிரான கையெழுத்துப் போராட்டமும் ஆரம்பிக்கப்பட்டது. இது பற்றி தகவல் வெளியிட்ட சட்டத்தரணி அ கனநாதன் வாரா வாரம் பிரித்தானிய அரச தஞ்சம் கோரிய தமிழர்களைத் திருப்பி அனுப்பி வருவதாகவும் அது பற்றி தமிழ் சமூகமும் தமிழ் ஊடகங்களும் மௌனம் சாதிப்பது மனவருத்தத்திற்குரியது எனவும் தெரிவித்தார்.

இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படும் வரை அகதிகளைத் திருப்பி அனுப்புவதை நிறுத்தவும், அகதிகள் விடயத்தை மனிதாபிமான ரீதியில் அணுகுக, அகதிகளது ஆட்பதிவு அலுவலகங்களில் தஞ்சம் கோரியவர்களை தரக்குறைவாக நடத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளை முன் வைத்து இப்போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. AGTAS - Action Group of Tamil Assylum Seekers தஞ்சம் கோரியுள்ள தமிழர்களின் நடவடிக்கைக் குழு என்ற அமைப்பு இப்போராட்டத்திற்கான அழைப்பை விடுத்திருந்தது.

இலங்கை மோசமான மனித உரிமைகள் மீறப்படுகின்ற நாடு என்பதை மார்ச் 10ல் US State Department வெளியிட்டுள்ள அறிக்கையில் தெளியாகக் குறிப்பிட்டுள்ளது. இலங்கை அரச படைகளும், வி.புலிகளும், அரசுடன் இயங்கும் துணைப்படைகளும் மனித உரிமைகளை மீறுவதாகவும் 2002 சமாதான உடன்படிக்கையை மீறுவதாகவும் அமெரிக்க அரசு தனது கடுமையான கண்டனத்தை அதில் தெரிவித்துள்ளது. ஏனைய பல்வேறு மனித உரிமை அமைப்புகளும் அதனைச் சுட்டிக்காட்டி உள்ளன.





மேலும் இலங்கைக்குச் செல்லும் தம் நாட்டு உல்லாசப் பயணிகளுக்கு மேற்கு நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன. ஆனால் தம் நாடுகளில் தஞ்சம்கோரிய தமிழர்களின் விண்ணப்பங்களை மட்டும் இலங்கையில் சமாதானம் ஏற்பட்டு விட்டதாக ஒரு மாதிரிக் கடிதத்தின் மூலமே நிராகரிக்கின்றன.

ஆனால் அரசியல் நலனுக்காக கட்சிகள் தஞ்சப் பிரச்சினையை கையிலெடுப்பதும் வலதுசாரி ஊடகங்கள் அதனை ஊதிப் பெருப்பிப்பதும் தஞ்சம் கோருவோர் மீது மேலும் மேலும் அழுத்தங்களை ஏற்படுத்தியது. இன்று இத்தஞ்சம் கோரியோர் இருண்ட எதிர்காலத்துடன் தலைமறைவாக வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். மிகவும் காலம் கடந்த நிலையில் ஆரம்பிக்கப்பட்ட இப்போராட்டங்கள் எவ்வளவுதூரம் வெற்றியளிக்கும் என்பது சந்தேகமே.

ஆயினும் தொடர்ச்சியான போராட்டங்களும் பாராளு மன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அழுத்தங்களும் நிலைமை மோசமடையாமல் தடுக்க வழியேற்படுத்தும் என நம்பப்படுகிறது. ஆகவே சார்பு நிலைகளில் இருந்து விடுபட்டு ஒரு பொது நோக்குடனான போராட்டங்களும் மிகவும் அவசியம். தமிழர்கள் தனித்து நின்று போராடுவதுடன் ஏனைய சமூகங்களுடனும் இணைந்து போராடக் கற்றுக் கொள்ள வேண்டும்.

மார்ச் 19ல் எடுக்கப்பட்ட சில படங்களை இங்கு காண்கிறீர்கள்.

புகைப்படம்: பொன் சிவக்குமார்

TRICO SHIPPING WORLDWIDE
20 YEARS IN SERVICE
Call us for a friendly personal service
Tel: 020 8888 8787
Fax: 020 8888 5445
Unit 4. Bluer Place. Coburg Road, Wood Green London N22 6TP

Panesar Electrical Co.
EST 1981
- Wylex 9 Way Split Load
- RCD+Main Switch
9 MCBs
ONLY £65
- Lux 10 Way Split Load
- RCD+Main Switch
- 10 MCBs
ONLY £55
More Quality Offers in Store
Tel: 020 8472 1873 Fax: 020 8471 6271

உண்மை - நடுநிலை - மக்கள் நலன்

# தஞ்சம் கோரியோரை ஓரம்கட்டுகிறார்கள் எம்மவர்கள்

தஞ்சம் கோரிய தமிழர்களை தமிழ் பொது அமைப்புகளும் சட்டத்தரணிகளும் கைவிடுகின்றனர். ஓரம்கட்டுகின்றனர். தங்களுக்கு எந்த வேலையை செய்தால் கிராண்ட் கிடைக்குமோ அதற்கேற்ற வேலைகளைத்தேடி பொது அமைப்புகள் அலைகின்றன. தஞ்சம் நிராகரிக்கப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை 30,000க்கும் அதிகம் என மதிப்பிடப்படுகிறது. ஆனால் அவர்களது தெவைகளை கவனிக்க பொது அமைப்புகள் முன்வரவதில்லை.

தொண்ணூறுக்களில் வேகமடைந்த புலம்பெயர்வின் போது பிரித்தானியாவிற்கும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் புலம்பெயர்ந்தனர். இந்த அகதித் தமிழர்களை நம்பி சட்ட நிறுவனங்களும், வீட்டு முகவர் நிறுவனங்களும், தமிழ் அமைப்புகளும், வர்த்தக நிறுவனங்களும் தோன்றித் தம்மை வளர்த்துக் கொண்டன. அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் தஞ்சம் கோருபவர்களுக்கு ஒதுக்கிய நிதி மற்றும் வளங்களில் பெரும்பங்கை தாமே நுகர்ந்தன.

தஞ்சம் கோருவோர் மீது அரசு ஒவ்வொரு ஆண்டும் மேலும் மேலும் அழுத்தங்களை அதிகரித்தது. தஞ்சம் கோருவோருக்கான நிதி மற்றும் வளங்களில் கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டதும் புற்றீசல்கள் போல் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் சட்ட நிறுவனங்களும், வீட்டு முகவர் நிறுவனங்களும், மற்றும் சமூக அமைப்புகளும் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட தமிழர்களை கண்டு கொள்ள மறுத்தன. Green Foamஇல் தாம் நினைத்த தொகையை எழுத முடியாமல் இருப்பதால், தாம் நினைத்தபடி Fresh Application போட முடியாமல் இருப்பதால் பெரும்பாலான சட்டத்தரணிகள் தஞ்சம் நிராகரிக்கப் பட்டவர்களை சந்திக்க மறுக்கின்றனர்.




பிரித்தானிய தமிழர்களது தஞ்ச வழக்குகளில் நிபுணத்துவம் பெற்ற சட்டத்தரணி டேவிட் பேர்ச்சஸ்

பிரித்தானியாவில் நூறு வரையான தமிழ் சட்டத்தரணிகள் பல ஆயிரம் தஞ்ச விண்ணப்பங்களை கையாண்டிருந்த போதும் தமிழர்களின் சிக்கலான வழக்குகளை வென்றெடுத்ததும் தமிழர்கள் விடயத்தில் உள்துறை அமைச்சின் கொள்கைகளுக்கு எதிராக வாதிட்டு வெற்றி பெற்றதும் டேவிட் பேஜ்சஸ் (படம்) என்பது குறிப்பிடத்தக்கது. அண்மைக் காலத்தில் தமிழ் சட்ட அமைப்புகளின் தவறான அணுகுமுறையால் திருப்பி அனுப்பப்படும் நிலையில் இருந்த வழக்குகளை ராஜேஸ்குமார் - சாய்மன் கியூச் கூட்டு வென்றெடுத்தது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையை பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் இருந்து நீக்க உள்துறை அமைச்சுடன் மோதல்

இலங்கையை பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் இருந்து நீக்க உள்துறை அமைச்சுடன் மோதவுள்ளார் சட்ட வல்லுனர் ராஜேஸ்குமார். உள்துறை அமைச்சுக்கு எதிரான இவ்வழக்கு ஏப்ரலில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது. இவ்வழக்கு வெற்றியடையும் பட்சத்தில் ஒட்ட மொத்தமாக இலங்கை பாதுகாப்பான நாடு என்று கோரி தஞ்சவிண்ணப்பங்களை நிராகரிக்கும் போக்கில் மாற்றம் ஏற்படும் என்கிறார் ராஜேஸ்குமார்.




2003 நடுப்பகுதி முதல் தஞ்ச மற்றும் குடிவரவுச் சட்டத்தின் 94வது பிரிவின் கீழ் இலங்கை பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் (White List) சேர்க்கப்பட்டது. இதன்படி இப்பட்டியலில் உள்ள நாடுகளில் இருந்து வந்து தஞ்சம் கேட்பவர்களின் தஞ்சக் கோரிக்கை தெளிவாக நிருபணமாகாதது எனத் தெரிவிக்கிறது. பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் இலங்கை சேர்க்கப்பட்டாலும் ஒருவருடைய தனிப்பட்ட சூழ்நிலையைப் பொறுத்து அவருடைய வழக்கு அணுகப்பட வேண்டும் என்ற ஏற்பாடும் அப்பிரிவில் வழங்கப்பட்டு உள்ளது. ஆனாலும் அதிகாரிகள் இலங்கை பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் இருப்பதால் அங்கிருந்து வரும் தஞ்ச விண்ணப்பங்கள் தெளிவாக நிருபணமாகாதது என நிராகரிக்கிறார்கள்.

கணிசமானவர்கள் பாதிக்கப்படுவதாலும் பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் இலங்கை இருப்பதால் அதிகாரிகள் ஒரு முடிவுடனேயே வழக்கை எடுத்துக் கொள்வதாலும் இலங்கை பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் இருந்த நீக்கப்பட வேண்டும் என்கிறார் ராஜேஸ்குமார். 2003ல் பட்டியலில் சேர்க்கப்படும் போதே இலங்கையில் வன்முறை இடம்பெற்றுக் கொண்டுள்ளது என்று குறிப்பிட்ட ராஜேஸ்குமார் தற்போது படுகொலைகளும் சத்திரவதைகளும் நாளாந்தமாக நடைபெறுகிறது என்றார். அவர் மேலும் குறிப்பிடுகையில் இலங்கையை பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் இட்டதே தவறு என்றும் அதனை தற்போது மோசமடைந்துள்ள நிலையிலும் தொடர்ந்தும் பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் வைத்திருக்க முடியாது என்றும் தெரிவித்தார். இவ்வழக்கு வெற்றியடையும் பட்சத்தில் தஞ்ச விண்ணப்பங்கள் சற்று வலுவடையும்.

# இலங்கையில் மனித உரிமைகளை நடைமுறைப்படுத்த வெஸ்ற்மினிஸ்டர் எம் பி க்கள் உறுதி

பொன் சிவகுமார்



எம் பி பரி காடினர்



எம் பி எட்வேட் டேவி



எம் பி அன்டி லவ்



எம் பி மைக் கேப்ஸ்

மார்ச் 7ல் இலங்கையில் மனித உரிமைகளை நிலைநிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான போராட்டம் வெஸ்ற்மினிஸ்டர் பாராளுமன்றத்தில் இடம்பெற்றது. தொழிற்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பரி காடினர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தொழிற்கட்சியைச் சேர்ந்த பா உ அன்டி லவ், லோட் ரொபி ஹரிஸ், பா உ ஸ்ரீபன் பொன்ட், பா உ மைக் கேப்ஸ் மற்றும் லிபிரல் டெமகிரட் பா உ எட்வேட் டேவி ஆகியோர் கலந்து கொண்டனர். பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்ட ஒரு நிகழ்வாக இது அமைந்திருந்தது.

இந்நிகழ்வில் ஆர் ஜெயதேன், சையட் பசீர், உபாலி குரே ஆகியோர் பிரதான உரையை ஆற்றினர். ஜெயதேவன் தனது உரையில் மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும், முஸ்லீம்கள் பேச்சுவார்த்தையில் தனித்தரப்பாக பங்குபற்ற வழி ஏற்படுத்தப்பட வேண்டும், இணைய வலையத்தில் செய்யப்படும் பயங்கரவாத செயல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். சையட் பசீர் தனதுரையில் முஸ்லீம்களின் தனித் தரப்பை வலியுறுத்தியதுடன் பிரித்தானிய அரசு அதிகாரப் பரவலாக்கத்தை 30 ஆண்டுகளுக்குப் பின்னரே ஸ்கொட்லந்தில் நடைமுறைப்படுத்தியதைச் சுட்டிக்காட்டினார். பா உ பரிகாடினர் வட கிழக்கு முஸ்லீம்களின் வெளியேற்றம் பற்றி பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியதைச் சுட்டிக்காட்டி அவருக்கு தன் நன்றியைத் தெரிவித்துக்கொண்டார். இலங்கை அரசாங்கம் காலம் தாழ்த்தாது உடனடியாக அதிகாரப் பரவலாக்கத்தை அமுல்படுத்த வேண்டும் என உபாலி குரே தனது உரையில் தெரிவித்தார். அவர் தனது உரையில் முஸ்லீம்களின் உரிமைகள் மறுக்கப்பட முடியாது என்பதையும் சுட்டிக்காட்டினார்.

பா உ அன்டி லவ் மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் சிறுவர்கள் யுத்தத்தில் பயன்படுத்தப்படுத்துவது நிறுத்தப்பட வேண்டும் என்ற விடயங்களை வலியுறுத்தினார். அங்கு சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் நிச்சயமாக பிரித்தானிய அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்படும் என்ற உறுதியையும் அன்டி லவ் வழங்கி இருந்தார். பிரித்தானிய அரசு குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்புவதற்கு தாம் அழுத்தம் கொடுத்துவருவதாகக் குறிப்பிட்ட அன்டி லவ் அக்குழுவைச் சந்திக்க பல்வேறு அமைப்புகளும் முன்வர வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

பரி காடினர் தனது உரையில் மனித உரிமைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்திருந்தார். பக்கம் சாராது மனித உரிமைகளுக்காக குரல் கொடுப்பதன் சிரமங்களைச் சுட்டிக்காட்டி மனித உரிமைகளுக்காக குரல் கொடுக்க வந்துள்ள நீங்கள் ‘மிகவும் ஆபத்தானவர்கள்’ என்று நகைச்சுவையாகத் தெரிவித்தார்.



ஸ்ரீபன் பொன்ட்(படம்) பேசுகையில் பிரித்தானியாவுக்கு தமிழர்கள் தங்கள் உயிரைப் பாதுகாத்துக் கொள்ள வரும் நிலை இருக்கக் கூடாது மாறாக அவர்கள் நல்ல நண்பர்களாக சகோதரர்களாக வரவேண்டும் வாழ வேண்டும் என்று தெரிவித்தார்.



லோட் ரொபி ஹரிஸ் (படம்) லண்டனில் வாழும் தமிழர்கள் இளைஞர்களின் வன்முறையால் பாதிக்கப்படுவது பற்றி விரிவாகக் கூறினார். ஒரு சில இளைஞர்களது செயற்பாடுகள் முழுச் சமூகத்தையும் பாதிக்கிறது என்று குறிப்பிட்ட ரொபி ஹரிஸ் பொலிசாரின் ஒத்துழைப்புடன் இது முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

கூட்டத்தின் முடிவில் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இவை இலங்கை நோர்வேஜிய, பிரித்தானிய அரசுகளுக்கு அனுப்பி வைக்கப் படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

**புலம்பெயர் நாடுகளில் அந்தந்த நாடுகளின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு வாழும் மக்களிடம் மிரட்டிப் பணம் பறிப்பது என்பது சாத்தியமல்ல. இந்த அறிக்கையின் உண்மைத் தன்மையை நாங்கள் ஆராயவுள்ளோம்.**

வி.புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு ப தமிழ்ச்செல்வன்

## கனடா, இங்கிலாந்து மற்றும் மேற்கு நாடுகளில் வாழுகின்ற இலங்கைத் தமிழர்களை வி.புலிகள் அச்சுறுத்துகின்றனர், அவர்களிடம் பலாத்காரமாகப் பணம் பறிக்கின்றனர்.

Human Right Watch - HRW

வி.புலிகள் இலங்கையில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக் காக நிலையானதும் தொடர்ச்சியானதுமான நிதி வரவுக்காகவும், தாம் மேற்கொள்ளும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விமர்சனங்களை நசுக்குவதற்காகவும் கனடா, இங்கிலாந்து மற்றும் மேற்கு நாடுகளில் வாழுகின்ற இலங்கைத் தமிழர்கள் மீது அச்சுறுத்தல், பலாத்காரப் பணப்பறிப்பு என்பவை மட்டுமன்றி வன்முறை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுகின்றன என்று Human Right Watch - HRW அமைப்பு மார்ச் 16ல் வெளியிடப்பட்ட அறிக்கையில் குற்றம்சாட்டியுள்ளது. Funding the “Final War” LTTE Intimidation and Extortion in the Tamil Diaspora என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையை வி.புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் மறுத்துள்ளார்.



இவ்வறிக்கையை தயாரித்த ஜோ பேக்கர் ( advocacy director of the Children’s Rights Division at HRW) (படம்) புலம்பெயர் வாழ் தமிழர்களில் அனேகமானவர்கள் புலிகள் இயக்கத்துக்கு மிகவும் ஊக்கத்துடன் தமது ஆதரவை வழங்குகின்ற அதேவேளை அவர்களை ஆதரிக்காதவர்களிடம் இருந்தும் பலாத்காரப் பணப்பறிப்பு மற்றும் அச்சுறுத்தல்கள் மூலமாக அவ்வியக்கமானது தனது நடவடிக்கைகளுக்காக நிதியை பெற்றுக்கொள்கிறது என்றார்.

கனடிய தமிழர்கள் அதிகமாக வாழும் ரொறன்ரோவில் ஒவ்வொரு குடும்பமும் 2,500 முதல் 5,000 வரையான கனடிய டொலர்களை வழங்க வேண்டும் என புலிகள் இயக்கத்தினர் அழுத்தங்களை இட்டுள்ளதாகவும் சில வர்த்தக உரிமையாளர்கள் 100,000 கனடிய டொலர்களை வழங்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளதாகவும் அவ்வறிக்கை குற்றம்சாட்டியுள்ளது.

இலண்டனில் அனேகமான குடும்பங்கள் 2,000 பவுண்கள் வழங்க வேண்டும் எனக் கேட்குப்பட்டதோடு வர்த்தக உரிமையாளர்கள் 10,000 முதல் 100,000 பவுண்கள் வரையான தொகை வழங்க வேண்டும் எனக் கேட்கப்பட்டதாகவும் அவ்வறிக்கை கூறுகிறது. மேலும் நோர்வே மற்றும் பிரான்சில் வாழும் தமிழர்களும் இதற்கு சமனான தொகையினை வழங்க வேண்டும் என அணுகப்பட்டுள்ளதாக அவ்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது. நிதி வழங்க முடியாத நிலையில் உள்ள தமிழர்களிடம் வேறு யாரிடமாவது பணத்தைப் பெற்றுத் தாருங்கள் அல்லது வங்கிக்கடன் அட்டைகளுக்கூடாக (Credit cadrs) அல்லது வீட்டை அடமானம் வைத்து தமது பங்களிப்பை செய்யும்படி புலிகள் இயக்கத்தின் நிதி சேகரிப்பாளர்களினால் கூறப்பட்டுள்ளதாக அவ்வறிக்கை விபரமாகக் குறிப்பிட்டுள்ளது.

வி.புலிகளை வெளிப்படையாக விமர்சிக்கின்ற அல்லது புலிகள் இயக்கத்துக்கு எதிரானவர்கள் என்று கருதப்படுகின்ற புலம்பெயர் தமிழ் பத்திரிகையாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் என்போர் புலிகள் இயக்கத்தினால் அல்லது அவர்களோடு நெருக்கமான குழுக்களினால் மரண அச்சுறுத்தல், கடுமையான தாக்குதல்கள், சேறடிப்பு பிரச்சாரங்கள் மற்றும் இட்டுக்கட்டப்பட்ட கிரிமினல் குற்றச்சாட்டுகளுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் கடுமையான குற்றச்சாட்டுகளை HRW அமைப்பு வி.புலிகள் மீது வைத்துள்ளது.

புலிகளின் இந்நடவடிக்கைகளைத் தடுக்க கனடா மற்றும் இங்கிலாந்து அரசாங்கங்களின் அதிகாரப்பிரிவுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என HRW வலியுறுத்தி உள்ளது.

புலம்பெயர் நாடுகளில் அந்தந்த நாடுகளின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு வாழும் மக்களிடம் மிரட்டிப் பணம் பறிப்பது என்பது சாத்தியமல்ல என்றும் இந்த அறிக்கையின் உண்மைத் தன்மையை நாங்கள் ஆராயவுள்ளோம் என்று தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக வூல்விச் பகுதியில் வாழும் நிதி சேகரிப்பவர் ஒருவரிடம் தொடர்பு கொண்ட போது, லண்டனில் தாங்கள் யாரையும் பணம் கேட்டு வற்புறுத்துவதோ மிரட்டுவதோ இல்லை என்றும் அப்படிச் செய்திருந்தால் தொடர்ந்து நிதி சேகரிப்பில் ஈடுபட்டிருக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வறிக்கை சர்வதேச ரீதியில் வி.புலிகளுக்கு மிகுந்த நெருக்கடியை உருவாக்கி உள்ளது. ரொறன்ரோ சண், லண்டன் த கார்டியன், டென்மார்க் தொலைக்காட்சி என பிரபல்யமான ஊடகங்கள் பலவும் இவ்வறிக்கை பற்றிய விரிவான செய்திகளை வெளியிட்டு உள்ளன.

Jayesh Flowerist
Flowers for all Occasions..
Local - National - Worldwide
Delivery Service Avalable
Specialist in Wedding & Funeral Flowers
FREE PHONE 0800 092 22 33
Open 7 Days
020 8459 2828
366 High Rd, Willesden,
NW10 2EA, London
Bye Online ....
www.jeyeshflowrist.com

Asian Funeral Care Ltd
*A personal tailored service to meet every induvidual religious cultural need at reasonable rates
*Private viewing and Service Hall
Tel :0208 909 3030
Mob:07970 934623

Khosla & Co.
Chartered Certified Accountants
For your Accounting and Taxation needs
Call
Tel: 020 8548 8899
Fax: 020 8548 8846
412 Katherine Road
London E7 8NP

# UNBEATABLE PRICES

*** TILES * MARBLE * GRANITE * KITCHENS * BATHROOM * WOODFLOORING * FURNITURE**

MASSIVE SALE




MASSIVE SALE

ELITE TILES are undeniably UK's No.1
Importers, Distributors, Wholesalers and Retailers
of




*Specialists in Granite Worktops and Marble Vanity Tops to order*




## £2 MILLION POUNDS OF AVAILABLE STOCK TO CLEAR

**(collect same day)**

Web Site: www.elite-tiles.co.uk

**020 8202 1806 (12 lines)**
**020 8202 8608 (Fax)**
**Elite House, The Broadway,**
**West Hendon, London, NW9 7BP**

Open Mon-Fri 8.30am-6pm – Sat 10am-5pm – Sun 10am – 2pm

# மண்

## ஒரு பார்வை:

த ஜெயபாலன்

மாற்று, கனவுகள் நிஜமானால் ஆகிய படிகளினூடு வெளிவந்துள்ள புதியவனின் மூன்றாவது படைப்பான மண் நிச்சயமாக ஒரு வளர்ச்சிப் படியினைக் கொண்டுள்ளது. மண் புலம்பெயர் கலைஞர் களுடன் சிங்கள தொழில்நுட்பவியலா ளர்கள், கலைஞர்கள், தமிழக தொழில்நுட்பவியலாளர்கள், கலைஞர்களின் கூட்டு உழைப்பில் வெளிவந்துள்ளது. இவ்வாறான கூட்டு முயற்சிகளே இலங்கைத் தமிழ் சினிமாவை அடுத்த கட்டத்திற்கு நகர்த்து வதற்குரிய நெம்புகோலாக அமையும். ஆனால் இவை மட்டும் போதாது என்பதற்கு புலம்பெயர்ந்த கலைஞர்களும் தொழில்நுட்பவியலாளர்களும் தமிழக சினிமாத்துறையுடன் இணைந்து எடுத்த சில படங்கள் சான்றாக உள்ளன. அந்த வகையில் பதியவன் தனது படைப்பாளுமையை நிலைப்படுத்தியே உள்ளார்.

விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்ட வர். இடதுசாரி சிந்தனையை ஒரு காலத்தில் கொண்டிருந்தவர். இந்தப் பின்னணியில் சமூகக் கொடுமைகளுக்கு எதிரான ஒரு போராட்ட உணர்வு அவரிடம் இருப்பது மறுக்க முடியாதது. இதனை தான் எடுத்துக்கொண்ட சினிமா மொழியினூடாக அவர் சொல்ல முற்பட்டது தான் மண். ஆனால் வர்த்தக சினிமா (ஜனரஞ்சக சினிமா) உத்தியே மக்களை தன் படைப்பு நோக்கி கவரும் என்ற நம்பிக்கை மண்ணில் வெளிப்பட்டுள்ளது.

லண்டனில் இருந்து ஆவணப்படம் எடுக்க தனது சொந்த மண்ணான வன்னிக்கு வரும் பொன்ராசின் நினைவலைகள் பின்னோக்கிச் செல்கிறது. மலையகத்தில் இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர் சமூகத்தைச் சேர்ந்த லக்ஸ்மி குடும்பம் வன்னிக்கு இடம்பெயர்கின்றனர். இலங்கையில் இரண்டாம்தரப் பிரஜைகளாக நடத்தப்படும் தோட்டத் தொழிலாளர் சமூகத்தைச் சேர்ந்த லக்ஸ்மியும் அவள் குடும்பத்தினரும் வன்னி மண்ணில் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகின்றனர். அங்கு லக்ஸ்மிக்கும் உயர்சாதியைச் சேர்ந்த பொன்ராசுவுக்கும் காதல் மலர்கிறது. தன் காதல் சமூகக் கட்டமைப்பைத் தாண்டி (தொடர்ச்சி...... 12ம் பக்கத்தில்)



Shankara Asian Arts
Bharatanatyam & Modern Dance and Music Teacher Needed
07736804028

Baba Cash and Carry | Members of LANDMARK
Specialise in whole sale of beer, wine, sprit and soft drinks.
உங்கள் வியாபாரத்துக்குத் தேவையான குடிபானங்கள் அனைத்தையும் மொத்த விலையில் பெற்றுக்கொள்ள முடியும்.
Tel: 020 8589 0000 Fax: 020 8573 0000

Ellis & Co Residential Sale & Letting
வீடு வாடகைக்கோ, விற்கவோ, வாங்கவோ மேலும் Mortgage தேவைக்கோ நீங்கள் உடன் தொடர்பு கொள்ளவும்
Kumar on
(T) 020 8204 3300
(F) 020 8206 1102
(M) 07984 184064
email: kenton@ellisandco.co.uk
272, Streatfield Road, Kenton, Harrow

Woodstyle Kitchens & Bedrooms Ltd
Manufacturers of Superior Bedroom, Kitchen & Bathroom Units, Doors and Assessories
East London: Unit 4A R/O 328 Romford Road (via Palmerston Road) - Forest Gate London E7 8BS Tel: 020 8519 0100 Fax: 020 8555 1513
Essex: Unit 3 Ash Industrial Estate - Merring Way - Flex Meadow - The Pinnacles - Harlow - Essex - CM19 5TJ Tel: 01279 442100 Fax: 01279 442500
www.woodstyleuk.com

KENTON TUITION CENTRE
FOR QUALITY EDUCATION & PROGRESS
IN ENGLISH, MATHS & SCIENCE
KS 1, Ks2, Ks3, Ks4
11+ AND A LEVEL
CALL: 0208-909-2299
OR CALL AT: UNIT 2, FITZGERALD HOUSE (REAR OF 182 KENTON ROAD) ENTRANCE IN WILLOWCOURT AVENUE KENTON, HARROW, HA3 8ES.

JANI TAYLOR ASSOCIATES
- Expert Witness
- Forensic Accounting
- Litigation Support
- Tax Investigations
Office 6A, Popin Business Centre Southway, Wembley, Middlesex HA9 0HF
T: 020 8795 3429 F: 020 8795 3318
rajni@janitaylor.co.uk

HAVE A TASTIEST TREAT AT Chandni Chowk
CHANDNI CHOWK RESTAURANT & SWEETS
754/756 GREEN LANE DAGENHAM ESSEX RM8 1YT
T: 0203 222 2000
106 THE BROADWAY SOUTHALL, MIDDLESEX, UB1 1QF
T: 020 8867 7200

FUNTASIA Fancy Dress & Party Shop
Specialist in Party Goods
Established since 1984
229 Kenton Road, Kenton, Harrow HA3 0HD
Tel/Fax: 020 8907 1333
Web: www.funtasiaworld.com

KENTON PARK SERVICE STATION
MR YOGESH JHALA
M.O.T & Service
- MOT While-U-Wait
- MOT Failures prepared for Re-test
- All types of Mechanical Work carried out
384 Kenton Rd, Harrow, HA3 9DP
Tel 020 8907 3111, 020 8907 1091

Markandan & Uddin Solicitors
We have moved to
Thamil House, 720 Romford Rd, Manor Park, London E12 6BT
Tel: 020 8514 8300
Fax: 020 8514 8381

உதயனில் விளம்பரம் செய்ய 079 5768 1944

Mo's Restaurant & Takeway
020 8204 7667
020 8795 1254

Ranji's Cakes Ltd
Freshly made egg & egg-less cakes
Deliveries and Last Minute orders
17 Village Way East, Rayners Lane, HA2 7LX
T:020 8868 7876
M:07946713311

New Century Glazing Ltd.
...the ULTIMATE NEWBUILD or Complete refurbishment -
Eurocell's maintainence free PVCu WINDOWS and DOORS. FULLY WELDED and INTERNALLY BEADED...
Member of FENSA | Free Estimates
Tel: 020 8848 0189
Unit 5, Halls Business Centre, Pump Lane, Hayes, Middx.

SAFEWAY SHOPFITTERS
Shop Front - Roller Shutter - Glass - Signs
• Shop Shutters • Remote Control Garage butters • Van Shutters • Door Closers • Industrial Shutters • Door/Shutters Locks • Shutter Alterations
CHOICE OF ANY POWDER COATED COLOUR
SALES - SERVICE - REPAIR
LEICESTER - LONDON - BIRMINGHAM
FREE Estimates | Tel Head office: 020 8843 2235 | FREE Survey

Champers Wines CASH & CARRY
Suppliers of Wines, Beers and Spirits
Wide range of product available at very Competitive Prices
For further details contact
Sales on Tel: 020 8961 2889
Fax: 020 8963 0989
Unit 11, Cumberland Avenue, Park Royal, London NW10 7RT
We Accept All Major Credit Cards

B & B TIMBER & BUILDING MERCHANTS
For all your building and timber needs. Timber cut to size.
Open MON - SAT 8 am to 6 pm
WED only 8 am to 1 pm
Call 020 8574 6691
020 8571 3430
6,7,8 - North Parade, North Road, Southall

iwfurniture.com
The Furniture Warehouse
For all your furnitures needs. sofas, dinning sets, beds + mattresses, desks, coffee tables, wardrobes + chests
0845 201 0746
wimbledon, Hayes and Perivale

MANGALA MOTORS
High Quality at Sensible Prices
* Car/Van Sales
* Full and Iterim service
* MOT & Mechanical Repairs
* Professional Technician
* Fully Guranteed Job
Call On 020 8203 6655
Unit 1, 3 & 4, The Bridges Aerodrome Road, London NW4 4SS

RASIAH & CO. Solicitors
* Conveyancing (Residential & Commercial)
* Immigration
* Matrimonial
* Landlord & Tenants
* Police Station Representation
* Legal Aid work undertaken
020 8543 4040
020 8543 2400
180A Merton High Street, London SW19 1AY

உங்களின் உற்ற நண்பன் புலம் பெயர்ந்த தமிழரின் செய்திப் பத்[illegible] உ[illegible]
*******

### வாசகர் கடிதம்: எஸ் தில்லைநடராஜா வெம்பிளி (20.03.06)

## AGTAS உம் ஆர்ப்பாட்டமும்

தமிழ் அகதிகளின் பெயரில், AGTAS மார்ச் 19 ஞாயிறு அன்று லண்டனில் ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள். இது பற்றிய துண்டுப் பிரசுரத்தில் பல பா.உ கள் கலந்துகொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. விரக்தியின் விளிம்பில் இருக்கின்ற தமிழ் அகதிகள்; பிரிட்டிஸ் பா.உ க்கள் தங்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு சொல்வார்கள் என்று எதிர்பாத்து, குளிரையும் பொருட்படுத்தாது கூட்டத்தில் அமைதியாக காத்து நின்றவர்களுக்கு பெரும் ஏமாற்றமாற்றம் தான் மிஞ்சியது. லிபிரல் கவுன்சிலர் செல்வி மேனின் அரசியல் ஆசானாகிய சைமன் கியூச்சை விட வேறெவருமே ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

இது தொடர்பாக சண்றைஸ் வானொலியில் AGTAS அமைப்பாளர் என தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட கனநாதன், இந்த ஆர்ப்பாட்டம் அரசியலுக்கு அப்பாற்பட்டதாக இருக்கும் என்று தெரிவித்தார். சந்தேகத்தை போக்க பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகளும் சட்டத்தரணிகளும் அகதிகள் அமைப்பு பிரதிகளும் அழைக்கப்பட்டனர். சிலர் உரையாற்றினார்கள்.

தமிழ் அகதிகளாகிய தாங்கள் இந்த நிலைக்கு ஆளாக்கப்பட்டதற்கு காரணம் இந்த சட்டத்தரணிகளும் சங்கங்களும் தான் என்ற காரணத்தினால் தான் AGTAS சுயேட்சையாக நிராகரிக்கப்பட்ட அகதித் தமிழர்களை ஒன்றிணைய வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்து வந்தது. ஆனால் 'இப்போது இவர்களும் இந்த தமிழ் சட்டத்தரணிகளின் பொறிக்குள் அகப்பட்டுக்கொண்டு விட்டார்கள்' என்ற தங்களது விசனத்தை இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பல தமிழ் அகதிகள் தெரிவித்தார்கள்.

எம்மை கைது செய்கிறார்கள், மனிதாபிமானமாக நடத்துகிறார்கள் இல்லை, தடுத்து வைக்கின்றார்கள், திருப்பி அனுப்புகின்றார்கள், இவற்றுக்கு பரிகாரம் சொல்வார்கள் என்று இங்கு வந்தால் இவர்கள் தங்களுடைய பழைய பல்லவி இலங்கை அரசியல் தான் பாடுகிறார்கள்.

மேலும் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட மகஜர் ஒன்றை வாசிப்பதற்கு தமிழ் அகதிகளுடன் எந்த வகையிலுமே தொடர்பு இல்லாதவரும் தமிழ் மொழியே பேசத் தெரியாதவரும் பிரிட்டிஷ் பிரஜையான ஒருவரை பாவித்து AGTAS தனது கொள்கை வங்குரோத்தை வெளிக்காட்டிவிட்டது. மனித உரிமைவாதிகள் பலர் கூட்டத்தில் பேசுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. பிரித்தானியாவில் மனித உரிமைவாதிகளை கண்டுபிடிக்க முடியாத AGTAS பிரான்சிலிருந்து மனித உரிமைவாதி ஒருவரை இறக்குமதி செய்திருந்தார்கள்.

ஓட்டுமொத்தமாக சொல்லப்போனால் இந்த ஆர்ப்பாட்டம் AGTAS க்கும் தோல்வி, தமிழ் அகதிகளுக்கும் தோல்வி.

(இம்மடல் சர்ச்சைக்குரியதாக இருந்ததால் ஆசிரியர் குழுவினால் திருத்தியமைக்கப்பட்டு வெளியிடப்படுகிறது.)

## ரிபிசி ராம்ராஜின் தொடரும் சிறை நாடகம்



தமிழ் ஒளிபரப்புக் கூட்டுத்தாபனப் (ரிபிசி) பணிப்பாளர் வி ராம்ராஜின் (படம்) சிறை நாடகம் ஒரு மாதமாகத் தொடர்கிறது. ஜெனிவாவில் இடம்பெற்ற பேச்சு வார்த்தைகளின் இறுதிநாளான பெப்ரவரி 22ல் ராம்ராஜ் சுவிஸ் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். இலங்கையில் இரு தரப்பும் மனித உரிமைகளை மீறுவதைக் கண்டித்தும் நிரந்தர ஜனநாயகத்துடன் கூடிய தீர்வைக் காணு மாறு வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த போதே இவர் கைது செய்யப்பட்டு உள்ளார்.

எமக்கு கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி ராம்ராஜ் மீது சுவிஸ் பொலிசார் ஏற்கனவே வழக்கைத் தொடுத்து அவருக்கு எதிரான நிதி மன்றத் தீர்ப்பு பெற்றிருந்தனர். அத்தீர்ப்பின் படி ராம்ராஜ்க்கு 18 மாத சிறைத்தண்டனை தீர்க்கப்பட்டது. காப்புறுதி இன்றி வாகனம் ஓட்டியது மற்றும் கிறடிட் காட் சம்பந்தப்பட்ட குற்றத்திற்கே இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளதென தெரிய வருகிறது. ஆனால் முழுமையான விபரங்கள் எமக்கு கிடைக்கவில்லை.

Motor Masters
Top Quality Servicing & Repair on all Makes of Vehicles
M.O.T While You Wait
Unit 7 The Squirrel Trading Estate, Viveash Close, Nestles Ave, Hayes, Middlesex UB3 4RZ
Tel: 020 8561 9100
Fax: 020 8573 8641

ALFARAMA
DEDICATED TO ALFA ROMEO SINCE 1971
Alfa Romeo
SERVICE CENTRE
SALES • SERVICE • PARTS • BODYSHOP
LOAN CARS • COLLECTION & DELIVERY
020 - 8951 4100
UNIT 5 • PARR ROAD • STANMORE • MIDDX. HA7 1NL

Euro Auto Technik
We Specialise in
Mercedes and BMW
Repairs, Servicing for
All European and Japanese Vehicles
020 8573 4555
Unit 2, Tudor Works
Beaconsfield Road, Hayes UB4 0SL

# லண்டன் ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் மிரட்டப்பட்டார் : ரி கொன்ஸ்ரன்ரைன்



ஏப்ரல் 9ல் ரூற்றிங்கில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பிற்கு முன்னைய சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் மிரட்டப்பட்டார். லண்டன் ரிரிஎன் கலையகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்புக்கு அழைக்கப்பட்ட உதயகுமார் கண்ணனே அங்கு மிரட்டப்பட்டார். தீபம் எதிரொலி நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்கும் இவர் ஒரு சுயாதீன ஊடகவியலாளர் என்பது குறிப்பிடத்தக்கது.


முன்னாள் பிபிசி அறிவிப்பாளரும் சட்டத்தரணியுமான விமல் சொக்கநாதனின் (படம்) தலைமையில் இடம்பெற்ற இச்சந்திப்பில் அஞ்சல் ஆசிரியர் மகாலிங்கசிவம், புதினம் ஆசிரியர் ராஜகோபால், ரிரிஎன் எஸ் கருணலிங்கம், பாதிக்கப்பட்ட உதயகுமார் கண்ணன் மற்றும் சில ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர். ஈரோஸ் அமைப்பிலிருந்து வி.புலிகளுடன் இணைந்து கொண்ட வே பாலகுமாரின் அறிவுறுத்தலின்படி சர்வதேச தமிழ் ஊடகவியலாளருக்கான பினாமி அமைப்பொன்றை உருவாக்கும் நடவடிக்கையின் ஒரு கட்டமாகவே இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இப்பொறுப்பு நோர்வேயில் உள்ள குகன் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இச்சந்திப்பை கூட்ட ஏற்பாட்டாளர்களின் அனுமதியுடன் பதிவு செய்த கசட்டை ஒப்படைக்குமாறும் கண்ணன் வற்புறுத்தப்பட்டதை தொடர்ந்தே பதட்டம் ஏற்பட்டது. அதனைப் பிரதி செய்துவிட்டு மறுநாள் தருவதாக ரிரிஎன் கலையகத்தினர் கூறியுள்ளனர். பதிவு செய்வதாக இருந்தால் தனக்கு முன்னால் வைத்த பதிவு செய்து விட்டுத் தர வேண்டும் என கண்ணன் நிபந்தனையிட்டுள்ளார். ஆனால் கசட்டை ஒப்படைக்குமாறு கண்ணன் வற்புறுத்தப்பட்டார்.

மேலும் பதிவு செய்யப்பட்ட கசட்டை ஒப்படைக்காமல் வெளியே செல்ல முடியாது என தமது பொறுப்பாளர் கூறியதாக கண்ணனிடம் ரிரிஎன் கலையகத்தினர் தெரிவித்த போது நிலைமை மேலும் மோசமடைந்தது. நீங்கள் என்னை இங்கு தடுத்து வைத்திருக்கிறீர்களா? என கேள்வி எழுப்பிய கண்ணன் அப்படியானால் தான் பொலிஸிற்கு அறிவிக்கப் போவதாக எச்சரித்துள்ளார்.

யார் கசட்டை கேட்கச் சொன்னாரோ அவரை வரவழைக்குமாறு கண்ணன் கோரினார். அவர் இறுதிவரை வரவுமில்லை, கண்ணனைச் சந்திக்கவுமில்லை. கசட்டை தன்னால் ஒப்படைக்க முடியாது என்று தெரிவித்த கண்ணன் வேண்டுமானால் கசட்டை முழுமையாக சேதப்படுத்தப் போவதாகவும் எச்சரித்தார். நிலைமை மோசமடைவதை உணர்ந்தவர்கள் இறுதியில் கண்ணன் கசட்டுடன் வெளியேற அனுமதித்தனர்.

சர்வதேச ஊடகவியலாளர் சங்கம் ஒன்றை உருவாக்கவே இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் இச்சந்திப்பின் இறுதியில் அவர்களே சங்கத்தை சவப் பெட்டியில் வைத்து ஆணியும் அடித்ததாக அமைந்துள்ளது என்கிறார் பெயர் குறிப்பிட விரும்பாத ஊடகவியலாளர்.



## குடும்பங்களில் முரண்பாடுகளைத் தவிர்க்க நியூஹாமில் மாநாடு



தமிழ் சமூக அமைப்பினரால் (Tamil Community Forum) ஏற்பாடு செய்யப்பட்ட நியூஹாம் தமிழர்களின் மாநாடு மார்ச் 11 அன்று ஈஸ்ற்ஹாம் நகரமண்டபத்தில் இடம்பெற்றது. பெற்றோருக்கும் இளையவர்களுக்குமிடையே ஏற்படும் முரண்பாடுகளைத் தவிர்த்து எப்படி பரஸ்பரம் புரிந்தணர்வை ஏற்படுத்துவது என்பது இம்மாநாட்டின் முக்கிய அம்சமாக அமைந்தது. மேலும் தமிழ் சமூகத்தை முன்னோக்கி நகர்த்த இளைய சமூகத்தின் கருத்துக்களை கேட்டறியவும் இம்மாநாடு உதவியது. இம்மாநாட்டில் 300க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். உள்துறை அமைச்சு, நியூஹாம் கவுன்சில், நியூஹாம் பொலிஸ், முரண்பாடுகளும் மாற்றங்களும் Conflict & Change என்ற அமைப்பு என்பனவற்றின் ஆதரவுடன் இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

லண்டனில் முதற்தடவையாக இடம்பெறும் இவ்வகையான மாநாடு இது என்பது குறிப்பிடத்தக்கது. இன்றைய தமிழ் சமூகத்தின் எண்ணங்களை இளையவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும். அவர்களுடைய குறைகளைக் கேட்டறியவும் இது ஒரு வாய்ப்பாக அமைந்திருந்தது.

நியூஹாம் சிவிக் மேயர் மாணவிகளின் துணையுடன் மெழுகுவர்த்தியை ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். முதலாவதாக வரவேற்பு நிகழ்வும் அதனைத் தொடர்ந்து அறிமுக நிகழ்வும் இடம்பெற்றது. அடுத்து இளையவர்களுக்கும் மூத்தவர்களுக்குமான தனித் தனிப் பட்டறைகள் இடம்பெற்ற பின் இரு தொகுதியினரும் இணைந்த பட்டறை இடம்பெற்றது. பிள்ளைகள் மீது தமது





இரு மாணவிகள் சாதரணமாக வீட்டில் அம்மாவுக்கும் மகளுக்கும் எழும் பிரச்சினையையும் தீர்வையும் நடித்துக் காண்பிக்கிறார்கள்.

கட்டுப்பாட்டை வைத்திருக்க வேண்டும் என்ற வகையில் பெற்றோர் தம் அபிப்பிராயங்களை வெளியிட்டனர். இளையவர்கள் தம்மீதான அதீத கட்டுப்பாட்டையும் அழுத்தங்களையும் குறைபட்டுக் கொண்டனர். பெற்றோர்கள் தம்மை சந்தேகக் கண்ணோடு பார்ப்பதாகவும் அவர்கள் குறைபட்டனர்.

இச்சம்பவங்கள் நடித்துக் காண்பிக்கப்பட்டு அதற்கான தீர்வுகளும் ஆராயப்பட்டது. இம்மாநாடு பற்றிய முழுமையான விஞ்ஞானபூர்வமான அறிக்கை ஒன்று தயாரிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பட்டறையைத் தொடர்ந்து உணவு பரிமாறப்பட்டு மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் இறுதியில் இடம்பெற்றது.

அமைச்சர் ஸ்ரீபன் ரிம்ஸ் நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். தன்னாலான உதவிகளை தமிழ் சமூகத்திற்கு செய்ய தான் எப்பொழுதும் தயாராக இருப்பதாக அவர் உறுதியளித்தார்.









# Charity Commissionஇன் ஆறு ஆண்டு விசாரணை முடிவு: ரிஆர்ஓ நிதி ஆயுதங்களுக்கு அல்ல புனர்வாழ்வுக்கே பயன்படுத்தப்பட்டுள்ளது

ஆறு ஆண்டுகள் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (ரிஆர்ஓ) பிரித்தானிய கிளை மீது Charity Commission மேற்கொண்ட விசாரணைகள் இவ்வாண்டு பெப்ரவரியில் முடிவுக்கு வந்துள்ளது. ரிஆர்ஓ சில தவறுகளை விட்டிருந்த போதும், சேகரிக்கப்பட்ட நிதி புனர்வாழ்வு நடவடிக்கையிலேயே பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டு இருப்பதாக அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இலங்கையில் இருந்து வெளியாகும் த ஐலண்ட் பத்திரிகை ரிஆர்ஓவினால் சேகரிக்கப்படும் நிதி வி.புலிகளின் ஆயுதக் கொள்வனவுக்குப் பயன்படுத்தப்படுவதாக வெளியிட்ட கட்டுரையைத் தொடர்ந்தே ரிஆர்ஓ நெருக்கடிக்கு உள்ளாகி Charity பட்டியலில் இருந்தும் நீக்கப்பட்டது. அப்போது தமிழர் புனர்வாழ்வுக் கழக வங்கிக் கணக்கில் அண்ணளவாக £1.5 மில்லியன் பவுண்கள் வைப்பிலிருந்தது.

இது தொடர்பாக பெப்ரவரி 26ல் ரிஆர்ஓ பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டி விளக்கமளித்தது. ரிஆர்ஓ உறுப்பினர்கள் செல்வரட்ணம் (மேல்-வலம்), ரட்ணசபாபதி, குகச்சந்திரன் (மேல்-இடம்), டொக்டர் என் எஸ் மூர்த்தி (படம்-அருகே) ஆகியோர் கலந்து கொண்டனர். புதினம் ஆசிரியர் ஈ கெ ராஜகோபால், வடலி ஆசிரியர் வேந்தர்கோன், ஒரு பேப்பர் ஆசிரியர் கோபிநாத் மற்றும் உதயன், தேசம், ரிரிஎன் ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டனர்.



மீண்டும் உடனடியாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரித்தானியக் கிளையின் செயற்பாடுகளை ஆரம்பிக்காது தொடர்ந்தும் வெண்புறா மூலம் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாக அங்கு தெரிவிக்கப்பட்டது. உடனடியாக ரிஆர்ஓவின் செயற்பாடுகளை ஆரம்பிப்பது மீண்டும் சிக்கல்களை ஏற்படுத்தலாம் என்பதால் அதனை மெல்ல மெல்ல ஆரம்பிக்கலாம் என புனர்வாழ்வுக் கழக உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

மேலும் ரிஆர்ஓவின் மீதான விசாரணைகள் ரிஆர்ஓக்கும் Charity Commissionக்கும் படிப்பினைகளை பெற்றுத் தந்துள்ளதாகக் குறிப்பட்ட டொக்டர் மூர்த்தி ரிஆர்ஓ தனது சுயாதீனத்தையும் தனித்தன்மையையும் பேண வேண்டியதன் அவசியத்தை ஏற்றுக் கொண்டார். கடத்தப்பட்ட புனர்வாழ்வுக் கழக உறுப்பினர்கள் பற்றி அனைவரும் தமது மனவருத்தத்தை வெளியிட்டனர்.

ரிஆர்ஓ வில் சீரற்ற நிர்வாகம் இருந்ததற்கான ஆதாரம் இருப்பதாக Charity Commission வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது. நிதியை கையாளும் செயன்முறைகள் முறையான தாக இருக்கவில்லை என்றும் அது தெரிவித்துள்ளது. மேலும் இலங்கையில் இருந்து வரும் விண்ணப்பங்கள் விடயத்தில் ரஸ்டிகள் சிறிதளவு அல்லது எந்த கட்டுப்பாட்டையும் கொண்டிருக்கவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. செலவீனங்களுக்கான தெளிவான ஓடிற் காட்டப்படவில்லை எனவும் குற்றம்சாட்டும் அவ்வறிக்கை; அமெரிக்கா, கனடாவில் இருந்து வந்த நிதி பற்றி தெளிவான விளக்கத்தை ரிஆர்ஓ அளிக்கத் தவறியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது. இவற்றின் காரணமாக ரிஆர்ஓவின் சொத்துக்கள் ஆபத்தான நிலையில் இருப்பதாக Charity Commission முடிவுக்கு வந்ததாகவும் அவ்வறிக்கை கூறுகின்றது.



வடலி ஆசிரியர் வேந்தர்கோன்

இது பற்றி உதயன் பத்திரிகை எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த குகச்சந்திரன் Charity Commissionஆல் புனர்வாழ்வுக் கழகத்தை தடைசெய்ததற்கான காரணத்தை ஆதாரபூர்வமாக நிருபிக்க முடியவில்லை என்றும் அதனால் விழுந்தும் மீசையில் மண்படவில்லை என்பது போல் சமாளித்து ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளதாகக் கூறினார். சீரற்ற நிர்வாகம் காணப்பட்டதாகக் கூறுவது Charity Commission தன்னை தற்காத்துக் கொள்ளும் ஒரு நடவடிக்கையே என அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதியில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் நிதியை வங்கியூடாக அனுப்பி வைப்பது என்பது சாத்தியமற்ற ஒன்று எனக் குறிப்பிட்ட ரிஆர்ஓ பிரதிநிதிகள் தாங்கள் உண்டியலூடாகவே பணத்தை அனுப்ப வேண்டி இருந்ததாகத் தெரிவித்தனர். இதனை Charity Commission க்கு புரிய வைத்துள்ளோம் என்றும் அதனை அவர்கள் ஏற்றுக் கொண்டனர் என்றும் அங்கு தெரிவிக்கப்பட்டது. மேலும் ரிஆர்ஓ விசாரணைகளில் இருந்து Charity Commission னும் படிப்பினைகளைப் பெற்றுள்ளதாகத் ரிஆர்ஒ உறுப்பினர்கள் தெரிவித்தனர். யுத்த காலத்தில் வங்கிகள் இயங்காத நிலையில் நிதிப் பரிவர்த்தனையை எப்படி மேற்கொள்வது என்பது பற்றிய புதிய விதிமுறைகளை Charity Commission தற்போது அறிவித்துள்ளது என்பதை அவர்கள் சுட்டிக்காட்டினர்.

ரிஆர்ஓ நிதி வி.புலிகளின் ஆயுதக்கொள்வனவுக்கு பயன்படுத்தப் படுகிறது என்ற குற்றச்சாட்டு வி.புலிகளுக்கு எதிரான அணியில் உள்ளவர்களிடம் தற்போதும் உள்ளது. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சுயாதீனமாக செயற்படும் பட்சத்திலேயே இவ்வாறான குற்றச்சாட்டுகள் தவிர்க்கப்படும் என்பது பத்திரிகையாளர் மாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்டது. மேலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உறுப்பினர்கள் தங்களை வேறு அமைப்புகளில் அடையாளப்படுத்துவதும் புனர்வாழ்வுக்கழகத்தை பாதிக்குமென்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.



இடம்: ரிஆர்ஓ உறுப்பினர் கார்த்திக்
வலம்: ஒரு பேப்பர் ஆசிரியர் கோபிநாத்

குறிப்பாக ஜனவரியில் புனர்வாழ்வுக் கழக உறுப்பினர்கள் கடத்தப்பட்ட சம்பவம் சர்வதேச கண்டனத்தை பெற்றுக்கொள்ளாமைக்கான காரணங்கள் ஆராயப்பட்டது. அதற்கு மூன்றாம் உலக நாடுகளில் உயிரின் மதிப்பு எப்போதும் குறைத்தே மதிப்பிடப்படுவதாக ஒரு பேப்பர் ஆசிரியர் கோபிநாத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழ் ஊடகங்கள் இதனை சர்வதேசமயப்படுத்தும் அளவிற்கோ அல்லது தாக்கத்தை ஏற்படுத்துமளவிற்கோ வலுவான நிலையில் இல்லை எனத் தெரிவித்தார். அவரது கூற்றை பெரும்பாலான ஊடகவியலாளர்கள் ஏற்றுக்கொண்டனர்.

இவ்வாறான பொது விடயங்களில் ஊடகங்களின் ஒத்துழைப்பு எதிர்பார்க்கப்பட்டது. மேலும் ரிஆர்ஓ தனது நடவடிக்கைகளை தமிழ் பகுதிகளுடன் மட்டுப்படுத்தாமல் முஸ்லீம், சிங்களப் பகுதிகளுக்கும் விரிவாக்க உள்ளதாகவும் அச்சந்திப்பில் டொக்டர் என் எஸ் மூர்த்தி தெரிவித்தார்.

## ஈலிங் அம்பாளால் கைவிடப்பட்ட பிள்ளைகளை பொறுப்பெடுக்க கற்பக விநாயகர் ஆலயம் முன்வந்துள்ளது

தற்போதைய ஈலிங் கனக துர்க்கை அம்மன் ஆலய நிர்வாகத்தால் கைவிடப்பட்டுள்ள சிறார்களின் பொறுப்புகளை ஏற்கத் தயாராக இருப்பதாக கற்பக விநாயகர் ஆலய நிர்வாகத் தலைவர் கோபால் உதயனுக்குத் தெரிவித்தார்.

அச்சிறார்களின் பொறுப்பை தம்மிடம் ஒப்படைக்கும் பட்சத்தில் அவர்களை தத்தெடுத்துக் கொண்டவர்களின் உதவி யுடன் தாம் பராமரிக்கத் தயாராக இருப்பதாக அவர் கூறினார்.

கோபால் மேலும் தெரிவிக்கையில் மக்கள் சேவையே விநாயகப் பெருமானுக்கு செய்யப்படும் சேவை என்றும் கற்பக விநாயகர் ஆலயம் சிறியதாக இருந்த போதும் தன்னாலான சேவைகளை செய்வதில் பின்னிற்பதில்லை என்றும் தெரிவித்தார்.

அண்மையில் 60 பேர் தங்கி வாழ்வதற்கான முதியோர் இல்லம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஆலயம் ஈடுபட்டு உள்ளது. 10 மாதங்களில் நிறைவேற்றப்படக் கூடிய இத்திட்டத்திற்கு £27,000 ஆகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

தாயக புனரமைப்பிற்கு ஏற்கனவே £40,000 பவுண்களை வழங்கியுள்ள இவ்வாலயம் திருக்கோயிலில் உள்ள 36 சிறுவர்களை பராமரிக்கிறது. மேலும் தேர்த்திருவிழா நிதி வெண்புறா அமைப்பிற்கு வழங்கப்பட்டு வருகிறது. லண்டனில் இடம்பெறும் கலை, இலக்கிய முயற்சிகளுக்கும் ஆலயம் ஒத்துழைப்பு வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

ஆலயம் சமயப் பணிகளுடன் சமூகப்பணிகளையும் செய்து வருகிது என்று குறிப்பிட்ட கோபால் ஆலயத்தில் விநாயகப் பெரு மானின் வசந்த நவராத்திரி அலங்கார உற்சவம் மார்ச் 29 முதல் ஏப்ரல் 8 வரை இடம் பெறவுள்ளதையும் சுட்டிக் காட்டினார். இத்தினங்களில் சிறப்பு சொற்பொழிவுக்ளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளதாகத் தெரிவித்த அவர் ஏப்ரல் 6 அலங்காரத் தேர் பவனி சிறப்பானது எனத் தெரிவித்தார்

## தமிழ் ஓலைகள் 2006

தமிழ் ஓலைகள் 2006 வழமை போல் தமிழ் புதுவருடப் பிறப்பன்று வெளிவர உள்ளதாக அதன் பொறுப்பாளர் சிறிஸ்கந்தராஜா உதயனுக்குத் தெரிவித்தார். 1994 முதல் தொடர்ச்சியாக வெளிவரும் தமிழ் ஓலைகள் ஐரோப்பாவில் நுகர்வோர் தொகையிலும் பிரசுர எண்ணிக்கையிலும் முதலிடத்தைப் பெற்றிருப்பதாக அவர் பெருமையுடன் தெரிவித்தார். கடந்த 13 ஆண்டுகளாக வெளிவரும் தமிழ் ஓலைகள் பிரித்தானிய தமிழ் இல்லங்களின் ஒரு அங்கமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதுவை: கவிச்சோலைக் கலையரங்கம்



'புதுவையின் 40 ஆண்டு காலக் கவிச்சோலைக் கலையரங்கம்' என்ற நிகழ்வு வின்சன் சேர்ச்ஹில் மண்டபத்தில் மார்ச் 26ல் இடம்பெற்றது. வி.புலிகளின் ஆஸ்தான கவியான புதுவை ரத்தினதுரையின் 40 ஆண்டுகால இலக்கியப் பயணத்தை சீர்தூக்கிப் பார்க்கும் நிகழ்வாக இது அமைந்தது. வாழ்வையும் எழுத்தையும் வகைபிரித்து அதுவேறு இதுவேறு எனச் சொல்லும் இரட்டை வாழ்வு தனக்கென்றுமே இருந்ததில்லை என ஓரிடத்தில் குறிப்பிடும் புதுவை மற்றவர்க்குச் சொல்லு முன்னர் தனது எழுத்துக்கு தானே சாட்சியாக இருக்க விரும்புவதாக கூறுகிறார். வி.புலிகளுடன் இணைவதற்கு முன்னரே சமூக ஒடுக்கு முறைகளுக்கு எதிராக புதுவை குரல்கொடுத்து வந்துள்ளார். புலம்பெயர்ந்த தமிழர்கள் பற்றிய புதுவையின் சில குறிப்புகள் மேற்கு நாடுகளில் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளானது. பின்னர் அவ்வாறான கருத்துக்கள் தவிர்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. புதுவை கலந்து கொள்ளாமலே இடம்பெற்ற இந்நிகழ்வில் பலரும் அவரை வாழ்த்தினர்.

# இலக்கியர் எஸ். கருணானந்தராஜா (யுகசாரதி) வுக்கு சென்னையில் இடம்பெற்ற விழாவில் பாரதி இலக்கியச் செல்வர் விருது

பெப்ரவரி 5 சென்னை மைலாப்பூர் பாரதீய வித்யா பவனில் ஸ்ரீராம் நிறுவனங்களால் நடாத்தப்பட்ட 19வது பாரதி விழாவில் எஸ். கருணானந்தராஜா (யுகசாரதி) அவர்களுக்கு அவர் எழுதிய பாரதியின் குயில்பாட்டின் தத்துவ மர்மம் என்னும் நூலுக்காக 'பாரதி இலக்கியச் செல்வர்' விருதும் பொற்கிழியும் பொன்னாடையும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இவருடன் சோவியத் நாட்டின் நேரு விருது பெற்ற ஜனசக்தி இதழின் முன்னாள் ஆசிரியர் பாரதி சீனிவாசன், கோவையைச் சேர்ந்த திருமதி சாதனா ராதாக்கிருஷ்ணன் ஆகியோரும் பாரதி புகழ்பரப்பும் சான்றோருக்கான மேற்படி விருதைப் பெற்றுக்கொண்டனர்.

இயக்குனர் திலகம் பத்மஸ்ரீ டாக்டர் கே. பாலச்சந்தர் பொன்னாடை போர்த்த அசோக் லேலண்ட் லிமிட்டட் நிர்வாக இயக்குனர் ஆர். சேஷாயி விருதை வழங்கிக் கௌரவித்தார். அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் கலைமாமணி விக்கிரமன் விருது வழங்கலுக்கான காரணங்களை மொழிந்தார். ஸ்ரீராம் நிறவனங்களின் நிறைவேற்று அதிகாரியும் மேற்படி விழாக்குழுத் தலைவருமான ஜி. சுந்தரேசன் அறிமுகவுரை நிகழ்த்த டாக்டர் அவ்வை நடராஜன் வரவேற்புரையாற்றினார். இசைமேதை லால்குடி ஜெயராமன் பிரசன்னத்தில் அவரது புதல்வி லால்குடி விஜயலட்சுமி பாரதி பாடல்களை இசைத்தார்.



சென்னை வை.எம். சி ஏ பட்டி மன்றத்தில் கருணானந்தராஜாவின் பாரதி குயில்பாட்டின் தத்ததுவ மர்மம் நூல் பற்றிய அவரது விளக்கவுரை பல அறிஞர்கள் முன்னிலையில் நிகழ்த்தப்பட்டு அந்நூலின் கருத்துகளுக்கான அங்கீகாரமும் பாராட்டும் அவருக்குக்குக் கிடைத்தது.

# இலண்டனில் சுடரொளியின் 16 வது நூல் வெளியீட்டு விழா



சுடரொளி வெளியீட்டுக்கழகம் இரண்டு நூல் வெளியீடுகளை பெப்ரவரி 18ல் நடத்தியது. இந்த இரண்டு நூல்களில் ஒன்று பல்கலைப் புலவர் க.சி. குலரத்தினம் எழுதிய 'செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்' நூலின் இரண்டாம் பதிப்பு. மற்றொன்று சுடரொளி வெளியீட்டுக்கழகத்தினால் இரண்டாவது தடவையாக உலகளாவிய ரீதியில் நடத்தப்பெற்ற கவிதைப்போட்டியில் பரிசில்கள் பெற்ற கவிதைகளின் தொகுப்பான 'புதுயுகத்தமிழர்' நூல்.

இந்நிகழ்வில் பல்வேறு கலை அம்சங்களும் இடம்பெற்றது. புலவர் இளவாலை அமுது செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் நூலினை ஆய்வுரை செய்தார். இவரைத் தொடர்ந்து மு. நித்தியானந்தன், தமிழ்ப் பாடசாலை தலைமை ஆசிரியர் திருமதி உமா ஜெயகுமார், நூல்தேட்டம் ஆசிரியர் என். செல்வராஜா ஆகியோர் நூலை ஆய்வு செய்தனர். இதணைத் தொடர்ந்து 'புதுயுகத்தமிழர்' நூலை கருணானந்தராசா ஆய்வுரை செய்தார். உணவு பரிமாறலுடன் விழா இனிதே நடந்தேறியது.

# முன் பக்கத் தொடர்ச்சி . . . ஹரோ கிழக்கிற்கு 1997ம் ஆண்டிலிருந்து . . .

2005ம் ஆண்டு மே மாதம் நிகழ்ந்த லேபர் கட்சியின் தேர்தலைத் தொடர்ந்து, நாட்டின் தஞ்சம் கோருதல், குடிவரவு மற்றும் பிரஜாவுரிமை வழங்கும் பிரிவின் மந்திரியாக நான் நியமிக்கப் பட்டேன். இந்தப் பதவி, அடையாள அட்டைகள் வழங்குதல், குடியகல்வு, நாட்டின் எல்லைக்குள் பிரவேசிப்பதற்கான கட்டுப்பாடுகள் மற்றும் நாடு கடத்துதல் உட்பட்ட பல்வேறு தர்க்கத்துக்குரிய விடயங்களுடன் சம்பந்தப்பட்ட மிகவும் சிரமமானதும் சவால் மிகுந்ததுமான ஓர் பதவியாகும். இருந்தபோதிலும், உள்நாட்டில் நடைபெற்ற பல்வேறு வகையான விவகாரங்களில் ஈடுபட்டு அவற்றை செவ்வனே தீர்த்து வைத்ததன் வாயிலாக நான் பெற்றுக் கொண்ட அனுபவத்தைப் பயன்படுத்தி இந்தப் பதவியின் பொறுப்புக்களை சரியாகவும் ஆழமாகவும் விளங்கிக்கொண்டு சிறப்பாக செயலாற்ற முடிகிறது.

2004.'.5ம் ஆண்டுகளில் நிகழ்ந்த இயற்கை அழிவுகளால் பாதிக்கப்பட்டோருக்கு ஹறோ பகுதிவாழ் மக்கள் தம்மாலான முழுப் பங்களிப்பினை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. ஆழிப்பேரலை, தென்னாசியப் புவிநடுக்கம் மற்றும் கிரெனடாவில் ஏற்பட்ட சூறாவளி (ஹறிகேன் இவான்) என்பவற்றால் பாதிக்கப்பட்டோருக்கு உதவும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுகளில் நானும் பங்கு கொன்டேன். இரண்டாம் உலகப்போர் முடிந்து அறுபது ஆண்டுகள் பூர்த்தியாகியதை முன்னிட்டு சிவிக் நிலையத்திற்கு வெளியில் ஓர் புதிய போர் ஞாபகார்த்தக் கல் ஸ்தாபிக்கப்பட்டது.

ஹறோ வாழ் மக்கள் பல்வேறுபட்ட கலாச்சார வாழ்க்கைமுறைகளால் ஏற்படக் கூடிய நன்மைகளை அநுபவித்து வருகிறார்கள். நாம் ஒற்றுமையுடனும் செழிப்புடனும் வாழவேண்டுமாயின், அனைவரும் ஒன்றுபட்டு உழைக்கவும் வாழவும் பழகிக்கொள்ள வேண்டும். அதுவே எமது லேபர் கட்சியின் கொள்கையும் இலட்சியமுமாகும். இந்த லட்சியத்தை அடைவதற்காக எமது லேபர் உறுப்பினர்கள் எதிர்வரும் மே மாத தேர்தலில் அரும்பாடு பட்டு உழைப்பார்கள் என்பதையும் இத்தால் அறிவிக்க விரும்புகிறேன்.

9ம் பக்கத் தொடர்ச்சி....

# புதியவனின் மண் ஒரு பார்வை

நிலைக்கும் என்ற நம்பிக்கையில் பொன்ராசிடம் தன்னையே ஒப்படைக்கிறாள் லக்ஸ்மி. ஆனால் விடயம் வீட்டில் தெரியவந்து லக்ஸ்மி குடும்பம் நிலைகுலைந்த போதும் தான் அவளைத் திருமணம் செய்வதாக லக்ஸ்மியை நம்ப வைத்துவிட்ட லண்டன் செல்கிறான் பொன்ராசு. தனது தாய் லக்ஸ்மிக்க இழைக்கப்பட்ட அநீதிக்காக மீண்டும் வன்னிக்கு வந்த பொன்ராசை சுட்டுக்கொன்று பழிதீர்க்கிறான் மகன். இதுவே மண்ணின் கதை.

முன்னைய படங்களைக் காட்டிலும் தொழில்நுட்பவிடயங்களில் மண் கணிசமான அளவு முன்னேற்றம் கண்டுள்ளது. தன் மீதான விமர்சனங்களை உள்வாங்கிக் கொள்வதும் அதனை சீர்படுத்த முயற்சிப்பதும் புதியவன் புலம்பெயர் சினிமாவில் முன்னிலையில் தன்னை தக்க வைத்துக்கொள்ள அனுகூலமாக உள்ளது. ஜேர்மன் விஜயின் இசையமைப்பு நன்றாக அமைந்துள்ளது. படத்தொகுப்பு இன்னமும் செழுமையாக இருந்திருக்க முடியும். காட்சிகள் இயல்பாக நகர்வதற்குப் பதிலாக சில இடங்களில் முறிவடைந்தது அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

புலம்பெயர் சினிமா அல்லது ஈழத்து சினிமாவின் ஆணிவேர் அதன் கதைக்கருவும் அது சொல்லப்பட்ட விதமும். புதியவனைப் பொறுத்தவரை அவர் எடுத்தக் கொண்ட கதைக்கருவை படம் முழுவதும் தக்க வைப்பதை அவரது மூன்று படைப்புகளிலும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. கதைக்கரு பற்றி இறுதியில் பார்ப்போம். அது சொல்லப்பட்ட விதத்தை இப்போது பார்ப்போம்.

மண்ணின் கதையை சினிமா மொழியில் சொல்லும் பொழுது சிக்கலுக்கு உள்ளாகிறார் புதியவன். கதையினுடைய பிரதான மையம் லக்ஸ்மி. உரையாடல் மூலமாக அல்லாமல் காட்சிப் பதிவுகள் மூலமாக சினிமா மொழியில் லக்ஸ்மி குடும்பத்தின் புலம்பெயர்வு, ஒடுக்குமுறைகள் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். இது கதைக்கு உயிரோட்டமாக இருந்திருக்கும்.

பாடசாலை மாணவர்களின் குறும்புகள் வெறுமனெ சிலேடைகளாக, பாலியல் தொனி கொண்டதாகவே பெரும்பாலும் அமைந்துள்ளது. காண்பிக்கப்பட்ட ஆசிரியையின் உரையாடல்களும், சினேகிதியுடைய உரையாடல்களும் கூட அவ்வாறே காண்பிக்கப்பட்டது. கிராமப்புறப் பாடசாலையில் குறைந்தது 20 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் பத்தாம் வகுப்பு மாணவர்கள் வகுப்பில் இவ்வாறு பாலியல் தொனியுடன் பேசுவது யதார்த்தமாகப் படவில்லை. மேலும் அக்கால கட்டத்தில் கட்டாயமாக மாணவர்கள் சப்பாத்துடன் வரவேண்டும் என்ற விதிமுறைகளும் யதார்த்தமாக இல்லை. லக்ஸ்மியும் மாணவர்களும் பயன்படுத்தும் ப்பிளீஸ், தங்கியூ, போன்ற ஆங்கில சொற்பிரயோகங்களும் காலத்திற்கு ஒப்பவில்லை.

ஆசிரியர் மாணவன் ஒருவனைத் தண்டிக்கும் முறையும் அவனது சகோதரி கலங்கி நிற்பதும் படத்துடன் தொடர்பறுந்த நிலையில் உள்ளது. அங்கு இயக்குநர் தான் நினைத்ததை சொல்லாமலே விட்டுவிட்டார் என்றே நினைக்கிறேன்.

தன்னை மணம் முடிக்க நிச்சயிக்கப்பட்ட தனக்காக வாழும் தனது மாமனில் மரியாதையுடைய லக்ஸ்மி, சஞ்சலமில்லாமல் பொன்ராசுவின் மீது காதல் கொள்கிறாள். இதனை கவனத்தில் கொண்டிருக் வேண்டும் என்றே தோன்றுகிறது.

இலங்கைத் தமிழ் சினிமாவுக்குப் பொருத்தமற்றது என்ற வாதத்தை முறியடிப்பதில் மண் ஓரளவு வெற்றி கண்டுள்ளது. ஆயினும் லக்ஸ்மியின் உரையாடல்களில் மொழி இன்னமும் செழுமையாக கையாண்டிருக்க முடியும். லகஸ்மியின் உரையாடல்களில் இரு பிரதேச மொழிகளினது கலப்பும் கதாபாத்திரத்தின் தனித்துவத்தை சிதைத்துள்ளது. மேலும் பொன்ராசுவாக இருவர் நடிப்பது நடிப்பினதும் அலங்காரத்தினதம் வறுமையையே காட்டுகிறது.

இறுதியாக மண்ணின் கதைக் கருவுக்காக புதியவன் பாராட்டப்பட வேண்டும். ஆண்டாண்டு காலம் ஒடுக்கப்பட்ட ஒரு சமூகத்தின் கதையை ஓரளவுக்காவது நேர்த்தியாக சொல்ல புதியவன் முற்பட்டுள்ளார். பொன்ராசு ஓடித் தப்பிப்பதும் லக்ஸ்மி அபலையாக கைவிடப்பட்டதும் சமூக யதார்த்தம். வர்த்தக சினிமாவின் Happy Endingகை விட்டுவிட்டு வர்க்க சமரசத்திற்கு செல்லாமல் சமூக யதார்த்தத்தை முன்னிறுத்தியுள்ளார் புதியவன்.

ஆனால் தன்னை ஏமாற்றியவனை நினைத்தே வாழும், திருந்தும்வரை காத்திருக்கும், உயிரைமாய்க்கும் தமிழ் சினிமா பெண்களின் சூத்திரத்திலேயே புதியவனும் கட்டுண்டு போயிருப்பது ஆச்சரியம். சமூக ஒடுக்கு முறையை அநீதியைப் பற்றி அல்லாமல் அதனை தனிமனிதனுடைய தவறாக மட்டுமே பார்க்கும் லக்ஸ்மியின் மகன் வழங்கும் தண்டனை இந்த சமூக ஒடுக்குமுறைக்கு தீர்வாகுமா?

தவறிழைத்தார்கள் என்பதற்காக ஆசிரியர் மாணவனை அடிப்பது, பெற்றார்கள் பிள்ளைகளை அடிப்பது, எசமான் வேலைக்காரனை அடிப்பது என வன்முறை வாழ்வியலின் முக்கிய அம்சமாக காண்பிக்கப்பட்டுள்ளது. அது யதார்த்தமானதும் கூட. முடிவாக பொன்ராசு சுட்டுக் கொல்லப்படுகிறான். இந்த வன்முறையின் வெவ்வேறு வடிவங்களை காண்பிக்கும் இயக்குநர் அதனை அப்படியே பிரதிபலிப்பதன் மூலம் அந்த கட்டமைப்பை ஏற்றுக் கொள்கிறாரா? வன்முறையே எப்போதும் தீர்வாக அமையுமா? என்ற கேள்விகள் எழுகிறது.

புதியவனின் மண் இலங்கைத் தமிழ் சினிமாவில் நிச்சயம் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்துள்ளது. இந்த படைப்பக்கு ஊக்கமளிப்பதன் மூலம் இவ்வாறான தரமான படைப்புகள் உருவாவதற்கான சூழலை ஏற்படுத்த முடியும். ஆகவே முடிந்தவரை இந்த மண் வாசனையை அனுபவிப்பது ஆரோக்கியமானது.

# லண்டன் தமிழ் நிலையத்தின் கலாச்சாரமாலை

லண்டன் தமிழ் நிலையம் வழங்கும் கலாச்சார மாலை நிகழ்வு ஏப்ரல் 22ல் இடம்பெறவுள்ளது. லோகன் மண்டபத்தில் இடம்பெறும் இந்நிகழ்வில் மதுரை மீனாட்சி நாட்டிய நாடகமும் வாத்திய சங்கமமும் இடம்பெறவுள்ளது.

திருமதி உமா சந்திரதேவா, செல்வி அம்பிகை சீவரத்தினம், திருமதி கிருஷ்ணலதா கதிர்காமநாதன், திருமதி பிரேமிளா ரமணன், திருமதி ரூபி சேகரன் ஆகியோரின் மாணவர்கள் நாட்டியநாடகத்தை அரங்கேற்றுகின்றனர்.

சங்கீத வித்துவான் திருமதி சிவதாரணி சகாதேவன், திருமதி திலகசக்தி ஆராமுதன், ஏ ஜி ஏ ஞானசுந்தரம், சங்கீத ரத்தினம் திரு பி கிருபாகரன், வேணுகானமணி பி ஞர்னவரதன், திருமதி சிவாஜினி நவயோகராஜா ஆகியோரின் மாணவர்கள் வாத்திய சங்கமத்தை வழங்குகின்றனர்.

SRIHARANS SOLICITORS

AUTHORISED TO ADMINISTER OATH

Professional service for freedom and justice under the Human Rights Act of UN and with European Convention of Human Rights

(P) 020 8843 9977
020 8843 9974 (3 lines)
223 The Broadway
Southall, Middx.

David Shine & Kharhanda Solicitors

Divorce, Litigation,
Wills Probate,
CONVEYANCING
MATRIMONIAL & FAMILY
Also Landlord & Tenant Cases
See us Now
020 8571 6001 / 2
Southall

MORTGAGE PLUS
LONDON LTD
Mortgages Tailor-Made for you
Specialist in CCJ / Default Cases
020 8571 2570
077 1015 0713
81, South Rd, Southall, Middx, UB1 1SQ
your home at risk if you do not keep up repayments on mortgage or other loans secured on it.

# ஈழப் போராட்டத்தின் சாட்சியம் வரலாறானது !
# மரணத்திற்கு தேதி குறித்து மரணத்தை தழுவினார் சி புஸ்பராஜா !




ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம் நூலின் ஆசிரியர் சி புஸ்பராஜா மார்ச் 10 அன்று பாரிசில் காலமானார். சில வாரங்களுக்கு முன் புற்றுநோயால் பாதிக்கப் பட்டது கண்டறியப்பட்டு அவரது இறுதி முடிவு குடும்பத்தினருக்கு அறிவிக்கப்பட்டது. இறுதி முயற்சியாக அவரை தமிழ் நாட்டுக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளிக்கவும் முயற்சிக்கப்பட்டது. ஆனால் அங்கும் காலம் கடந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் மீண்டும் பாரிசுக்கு திரும்பிய சில தினங்களிலேயே அவர் காலமானார்.

மூன்றரை தசாப்தங்கள் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினையில் போராட்டகாரராகவும், ஈடுபாட்டாளராகவும் செயற்பட்ட புஸ்பராஜாவின் மறைவிற்கு இலக்கியச் சந்திப்புக்குழு, தமிழர் தகவல் நடுவம், அரசியல் மற்றும் இலக்கிய நண்பர்கள் தமது அஞ்சலியைச் செலுத்தி உள்ளனர். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (பத்மநாபா) யும் தனது முன்னாள் உறுப்பினரான புஸ்பராஜாவுக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டுள்ளது. அதன் சாரம்சம் இங்கே தரப்பட்டுள்ளது.

1970 களின் முற்பகுதியில் புஸ்பராஜா தேசிய ஒடுக்கு முறைக்கு எதிரான இளம் தலைமுறையினரின் முன்னணி போராட்டக்காரராக திகழ்ந்தார். பிரபலமான கொழும்பு நாலாம் மாடி சித்திரவதைகளை புஸ்பராஜாவும், அவரது சகோதரி புஸ்பராணியும் அனுபவித்திருக்கிறார்கள்.

அவர் ஆரம்பத்தில் தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் பின்புலத்தில் அகிம்சை போராட்டத்தில் நம்பிக்கைக் கொண்டிருந்தார். வடக்கு கிழக்கில் பரவலாக நடைபெற்ற சத்தியாக்கிரக போராட்டங்களுக்கும் தலைமை ஏற்றிருக்கிறார்.



1970 களின் நடுப் பகுதியில் தமிழீழ விடுதலை இயக்க உருவாக்கத்தில் பங்கேற்றவர். இதன் பின் இவர் சித்திரவதை சிறைகூடங்களுக்கு செல்ல நேர்ந்தது. பாரம்பரிய தலைமையின் செயற்பாடுகள் தொடர்பாக அவர் ஒரு ஜனநாயக அடிப்படையிலான கலகக்காரனாகவும், விமர்ச கனாகவும் திகழ்ந்தார். உரும்பிராய் சிவகுமாரன், சத்தியசீலன் போன்றவர்க ளுடன் இணைந்து செயற்படுவதில் சமூக ரீதியான அபிலாஷைகள் அவருக்கு இருந்தன.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் பத்மநாபா, வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜபெருமாள் ஆகியோருடன் 1970 களின் முற்பகுதியில் இருந்தே இணைந்து செயற்பட்டவர்.

1980 களின் முற்பகுதியில் புலம் பெயர்ந்து பிரான்ஸ்க்கு சென்று அங்கும் தனது அரசியல், சமூக பணிகளை தொடர்ந்தவர். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரான்ஸ் முன்னோடி செயற்பாட்டாளர்களில் ஒருவராக அவர் மிக நீண்டகாலம் செயற்பட்டவர். பின்னர் சுதந்திரமான அரசியல் சமூக செயற்பாட்டளாராக தனது பணிகளை பலவருடங்கள் தொடர்ந்தார்.

பிரான்ஸில் புலம்பெயர் வாழ்க்கை புஸ்பராஜாவின் மீது புதிய பரிமாணங்களை உருவாக்கியது. பெண்களின் உரிமைகள், சமூக சமத்துவம் பற்றி புதிய வெளிச்சம் அவரிடம் உருவாகியது. இலக்கிய சந்திப்புக்களில் சமூக அரசியல் விவகாரங்களில் புலம் பெயர் தளத்தில் புஸ்பராஜா ஒரு முக்கியமான மனிதராக திகழ்ந்தார்.

இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்து பிரான்சில் தஞ்சம் கோரிய இளைஞர் யுவதிகளுக்கு உதவி செய்வதில் தனது நண்பர்கள், தோழர்களுடன் இணைந்து இயலுமானவரை பணியாற்றினார்.




ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம் நூல்வெளியீடு லண்டனில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படம்.

ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம் என்ற அவரது நூல் திருத்தப்பட வேண்டிய பல இடைவெளிகளை கொண்டிருப்பினும் அது முக்கியத்துவம் வாய்ந்த நூல். அவரது சில கருத்துக்களில் உடன்பாடு இல்லையேயாயினும் அவர் ஒரு ஜனநாயகவாதி, சமூக சாதகமான மனிதர் என்பதை மறுப்பதற்கில்லை.

பாரிசில் படுகொலை செய்யப்பட்ட சபாலிங்கம், காலம்சென்ற உமாகாந்தன், கலைச்செல்வன் வரிசையில் புஸ்பராஜாவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மனிதர். காலத்தினூடு இம் மனிதர்களெல்லாம் விடைபெற்று சென்று விட்டனர்.

தனது மரணத்தின் திகதியை தெரிந்து கொண்டு புஸ்பராஜா தனது குறிப்புக்களை எழுதினார். அவர் இறுதியாக கூறிய வார்த்தைகளில் ஒன்று முக்கியமானது "வெடிமருந்து வீச்சமில்லாத உன் தெருக்களில் எம் பிள்ளைகள் நடக்கின்ற நாள் என்று வரும் எம் மண்ணே."

MRKANDAN&COSOLICITORS

அரசியல் தஞ்ச விடயங்கள், பிரித்தானிய பிரஜாவுரிமை விவாக விண்ணப்பங்கள், வீதிப் போக்குவரத்து வழக்குகள், ஒப்பந்த தகராறுகள், நுகர்வோர் பிரச்சினைகள், உறுதி தயாரித்தல், Bankruptcy Problems, மதுபான அனுமதிகள், கேளிக்கை களியாட்ட அனுமதிகள், கட்டட அனுமதிகள், Cafe அனமதிகள் யாவும் ஒரே கூரையின் கீழ்.
விபத்தில் அல்லது வேலையிடத்தில் காயம் அடைந்திருந்தால் நட்டஈடு கோருவது தொடர்பான விடயங்கள் No Win - No Fee அடிப்படையில் செய்யப்படும்.

020 8514 8188, 079 4601 0022
845 Romford Rd, Manor Park, London E12

## கலைச்செல்வனின் ஓராண்டு



காலம் சென்ற எழுத்தாளர் கலைச்செல்வனின் ஓராண்டு நினைவையொட்டி 'மறக்காத மனமுகமாய் எங்கள் கலைச்செல்வன்' என்ற ஞாபகார்த்த நிகழ்வு மார்ச் 5 பாரிஸில் இடம்பெற்றது. நண்பர்கள் வட்டம் ஏற்பாடு செய்த இந்நிகழ்வு க வாசுதேவனின் இருப்பும் இல்லாமையும் என்ற உரையுடன் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்வில் முடிவற்ற வெளி என்ற தலைப்பில் ரவீந்திரன் பிரதீபனின் புகைப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து நினைவுகளும் நாங்களும் என்ற தலைப்பில் நண்பர்கள் நினைவுரைகளை வழங்கினர். அருந்ததி இயக்கிய ஆற்றுகை : குழந்தைகளிடம் பொய் கூறாதீர்கள், அதனைத் தொடர்ந்து கலைச்செல்வனின் நினைவையொட்டிய தேடலின் அவலச்சுமை என்ற தலைப்பிலான உரை இடம்பெற்றது.

ஜரிஸ் பிரச்சினைகளை முன்வைத்து சமாதானத்தின் கதவுகள் என்ற தலைப்பில் அரசியல் ஆய்வாளர் வி சிவலிங்கம் தனது அரசியலுரையை நிகழ்த்தினார். தமராவின் வயலின் இசையும் இறுதியாக இரா ரஜீவன்குமாரின் கலையும் கலைஞனும் காலமாதலும் இடம்பெற்றது.

## மலேசியா முன்னாள் பிரதமரின் மகள் ஏற்படுத்திய புதிய சர்ச்சை



மலேசியா நாட்டின் பிரதமராக 22 ஆண்டுகள் இருந்தவர் மகாதிர் முகமது. இவரது 48 வயதான மூத்த மகள் மரீனா மகாதிர் புதிய சர்ச்சையை கிளப்பி இருக்கிறார்.

மலேசியாவில் உள்ள பெண்கள் பாரபட்சமான சட்ட விதிகளால் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும் தென்னாபிரிக்காவில் வெள்ளைக் காரர்கள் ஆட்சியின் போது இனஒதுக்கல் கொள்கையால் பாதிக்கப்பட்ட கறுப்பர்களைப் போல அவர்கள் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும் மரீனா கூறியுள்ளார். முஸ்லீம் பெண்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சட்டங்கள் முஸ்லீம் அல்லாத மக்களுக்கு பொருந்தாது என்றும் ஒரே நாட்டின் குடிமக்களுக்கு 2 விதமான சட்டங்கள் உள்ளன, இந்த சட்டம் ஒரு தரப்பினருக்கு மற்ற தரப்பினரை விட பாதகமாக உள்ளது என்றும் கூறியுள்ளார். மரீனாவின் பேச்சுக்கு முஸ்லீம்கள் மத்தியில் கடும் கண்டனம் எழுந்துள்ளது.

மலேசியாவின் இஸ்லாமிய குடும்பச்சட்டத்தில் சமீபத்தில் செய்யப்பட்ட திருத்தங்களின் படி முஸ்லீம் ஆண்கள் பல பெண்களை மணந்து கொள்வதும் அவர்களை விவாகரத்து செய்வதும் அவர்களின் சொத்தில் பங்கு பெறுவதும் எளிமையாக்கப்பட்டு உள்ளது. இதுதான் மரீனாவின் கோபத்துக்கு காரணம் என கூறப்படுகின்றது. இருப்பினும் மரீனாவின் இந்த கருத்துக்கு அந்த நாட்டில் கடும் கண்டனம் எழுந்துள்ளது.


## கராச்சி அமெரிக்க தூதரகம் அருகே குண்டுவெடிப்பு

அமெரிக்க அதிபர் புஷ்ஷின் பாகிஸ்தான் வருகையை எதிர்த்து கராச்சி நகரில் உள்ள அமெரிக்க துணை தூதரகத்துக்கு அருகே சக்தி வாய்ந்த குண்டுகள் அடுத்தடுத்து வெடித்ததில் 4 பேர் கொல்லப்பட்டனர், 30க்கும் மேற்பட்டோர் காயமுற்றனர்.

கொல்லப்பட்ட நால்வரில் ஒருவர் அமெரிக்கர் என்று புஷ் டெல்லி செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். இந்த குண்டுவெடிப்பில் 25 வாகனங்கள் அடையாளம் தெரியாத அளவுக்கு சேதமடைந்தன. அமெரிக்க தூதரகத்துக்கு அருகே மர்ரின்ட் ஐந்து நட்சத்திர விடுதியில் வாகனங்கள் நிறுத்துமிடத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 2 சக்தி வாய்ந்த குண்டுகள் வெடித்ததாக காவல்துறையினர் கூறியுள்ளார்கள். இந்த கார் குண்டு தாக்குதல் அமெரிக்க தூதரகத்துக்கு குறிவைத்தே நடத்தப்பட்டிருப்பதாக கூறப்படுகின்றது.

நட்சத்திர விடுதியில் ஒரு குண்டு மட்டுமே வெடித்ததாகவும் அதில் ஏற்பட்ட தீயினால் கார்களின் பெற்றோல் ராங்குகள் வெடித்ததை மற்றொரு குண்டு வெடிப்பு என்று கருதிவிட்டதாக கராச்சியில் உள்ள அரசுஉயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

## தலித் மக்களின் மீதான ஒடுக்குமுறையை கண்டித்து இலண்டன் இந்திய தூதரகம் முன்பு ஆர்ப்பாட்டம்



உயர்சாதியினரால் கொடூரமாகத் தாக்கப்பட்ட பான்ற் சிங்

கடந்த மார்ச் 3ம் திகதி லண்டனில் உள்ள இந்திய தூதரகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பஞ்ஞாப்பை சேர்ந்த பான்ற் சிங் என்பவர் ஏழை தலித் விவசாயி. இவருக்கு 8 பிள்ளைகள் உள்ளனர். இவர்களில் 18 வயது நிறைவடையாத பால்ஹிட் கவூர் என்ற பெண்ணை உயர்சாதியை சேர்ந்த நிலவுடமையாளர்கள் மூவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திவிட்டனர். உள்ளூர் பஞ்சாயத்தோ பாலியல் வன்முறைக்கு உட்பட்டவர்களையே பால்ஹிட் கவூரை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என தீர்ப்பளித்தது.

இதை கண்டித்து அங்குள்ள நீதிமன்றத்தில் முறையிட்டுள்ளார் பாதிக்கப்பட்ட பெண்ணின் தந்தையான பான்ற் சிங். நீதிமன்றமும் பாலியல் வன்முறையை நடத்திய உயர்சாதி நிலவுடமையாளர் மூவருக்கு ஆயுள் தண்டனை வழங்கியது. நீதிமன்ற உத்தரவினால் ஆத்திரமடைந்த உயர்சாதி குழுவொன்று பான்ற் சிங்கை தாக்கி 2 கைகளையும் ஒரு காலையும் வெட்டியுள்ளது. அங்குள்ள மருத்துவமனையோ 36 மணி நேரத்துக்கு எந்த வித சிகிச்சையும் அளிக்காமல் உயர்சாதியினருக்கு துணைபோயுள்ளது. இந்நிலையில் இடதுசாரி அமைப்புக்களின் உதவியால் வேறு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. மருத்துவமனையில் அவயங்களை இழந்து தவிக்கும் இந்த ஏழை தலித் விவசாயிக்கு நீதி வழங்க கோரி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## அலங்காரப் பதவியில் நியூசிலாந்தின் முதல் ஆசிய கவர்னர் ஜெனரல்

நியூசிலாந்து நாட்டின் அடுத்த கவர்னர் ஜெனரலாக ஆனந்த் சத்யானந்த் (61) நியமிக்கப்படுவதாக தகவல் வெளிவரத் தொடங்கியுள்ளன. இவர் அப்படி நியமிக்கப்பட்டால் இவர் தான் முதலாவது ஆசிய கவர்னர் ஜெனரலாக இருப்பார். இந்திய - பிஜிய தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்த ஆனந்த் சத்யானந்த் 10 ஆண்டுகள் நீதிபதியாகவும் ஆம்புட்ஸ்மேனாகவும் திறம்பட செயலாற்றியவர். நியூசிலாந்து நாட்டு அரசியல் சட்டப்படி பிரிட்டிஷ் ராணி தான் நாட்டின் தலைவர். அடுத்த இடம் கவர்னர் ஜெனரலுக்கு. ஆனால் தீவிர அரசியல் பங்களிப்போ அதிகாரமோ கிடையாது. அலங்காரப் பதவி தான்.

நியூசிலாந்தில் அமைச்சரவை ஆலோசனைப்படி பிரதம மந்திரி தான் எல்லா முடிவுகளையும் எடுக்கும் அதிகாரம் படைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியா மீது வங்காள தேசம் குற்றச்சாட்டு

கங்கை ஆற்றில் நீர் மட்டம் குறைந்துள்ளதற்கு இந்தியாவை குறை கூறியுள்ளது வங்க தேச அரசு. இந்திய - வங்க தேசத்துக்கு இடையேயான 1996ம் ஆண்டு ஒப்பந்தப்படி நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச அளவு கங்கை நீரை வங்க தேசம் பெற வேண்டும். ஆனால் பெப்ரவரி மாதத்தின் கடைசி 10 நாட்களும் மிகக்குறைந்த அளவு நீரையே வங்க தேசம் பெற்றுள்ளது. உத்தரவாதப்படுத்தப்பட்ட நீரின் அளவில் 3 ல் 1 பங்கு குறைந்துவிட்டது.


இதற்கு நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததை காரணமாக கூறுகிறது இந்தியா. கங்கை நீர் பங்கீடு ஒப்பந்தப்படி வங்க தேசம் பெற வேண்டிய நீரை பெற்றிட இந்தியா உதவ வேண்டும் என வங்க தேச நாட்டு நதிகள் ஆணையத்தின் இயக்குநர் சாஜத் ஹினடன் கூறியுள்ளார். பருவ மழைக்காலங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்படும் வங்க தேசம் வறட்சிக்காலங்களில் தண்ணீர் பற்றாக்குறையால் அவதிப்படுகின்றது.

### மலேசியாவுக்கான இந்திய தூதரக அதிகாரி திருப்பி அழைப்பு

மலேசியாவுக்கான இந்திய தூதரகத்தில் பணியாற்றி வந்த அதிகாரி ஆர்.கே.டி அரசை நாடு திரும்பும்படி இந்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது. மலேசியாவில் உள்ள இந்தியத் தொழிலாளர்கள் விவகாரங்களை ஆர்.கே.டி அரசு கவனித்து வந்தார். தொழிலாளர்களின் குடியேற்றம் தொடர்பான பிரச்சனையில் தனது அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்ததாக அரசு மீது குற்றம் சாட்டப்பட்டது. இதையடுத்து அவரை நாடு திரும்பும்படி இந்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பாக மலேசியாவில் உள்ள இந்திய தூதரகம் கருத்து தெரிவிக்காமல் மௌனம் சாதிக்கிறது.


## இந்தியாவில் அமெரிக்க தூதர் டேவிட் சி முல்ஃபோர்ட்க்கு எதிர்ப்பு



கடந்த ஜனவரி 26ல் பிரஸ் டிரஸ்ட் ஒ.்.ப் இந்தியாவுக்கு அளித்த பேட்டியில் முல்.்.போர்ட் கூறுகையில் 'வியன்னாவில் அணுசக்தி ஏஜன்சி கூட்டத்தின் போது இந்தியா ஈரானின் அணுசகத்தித் திட்டத்துக்கு எதிராக வாக்களிக்காவிட்டால் அது இந்திய - அமெரிக்க அணு போராட்டத்தின் மீது மோசமான விளைவை ஏற்படுத்தும்' என எச்சரிக்கை விடுத்துள்ளார். இவரது பேட்டி இந்திய உள்விவகாரத்தில் தலையிடுவதாக கூறி இடதுசாரிகள் கண்டித்து அறிக்கை விட்டுள்ளனர். இந்திய வெளியுறவு செயலாளரும் முல்.்.போர்ட்டினை அழைத்து தனது அதிருப்தியை வெளியிட்டு உள்ளார்.

இந்நிலையில் மேற்கு வங்க முதல்வர் புத்தேவ் பட்டாச்சாரியர் அமெரிக்க அதிபர் புஷ்ஷை மிகவும் அமைப்பு ரீதியாக செயல்படும் கொலைகார கும்பலின் தலைவன் என்று விமர்சிக்க அதை கண்டித்து முல்போர்ட் தனிப்பட்ட முறையில் மேற்கு வங்க முதல்வருக்கு கடிதம் எழுதியுள்ளார். இது இந்தியாவுக்கான அமெரிக்க தூதரின் அத்துமீறல் எனவும் இவரை உடனடியாக அமெரிக்காவுக்கு திருப்பி அனுப்ப வேண்டும் என்றும் கோரிக்கை வலுவடைந்து வருகின்றது. தனது அதிருப்தியை இந்திய அமைச்சகத்திடம் தான் அமெரிக்க தூதர் வெளிப்படுத்தியிருக்க வேண்டுமே ஒழிய கடிதம் எழுதி மிரட்டுவது என்பது இது ஒன்றும் அமெரிக்கா அல்ல என அதிருப்தியாளர்களும் கருத்து தெரிவித்து உள்ளனர்.

## ஊழல் புகார் எதிரொலி தாய்லாந்து பிரதமர் பதவி விலகல்



தாய்லாந்து நாட்டின் பிரதமர் பதவியில் தக்சின் வினவத்ரா இருந்து வருகிறார். இவர் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி ஊழல் செய்ததாக கூறி எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி உள்ளன. இவரை பதவிவிலகக் கோரி எதிர்க்கட்சிகள் இணைந்து பங்காக் நகரில் பிரமாண்டமான ஊர்வலத்தை நடத்தியுள்ளனர். ஊர்வலத்தில் பிரதமர் அலுவலகத்தை சுற்றி வளைத்து முற்றுகை போராட்டம் நடத்தி உள்ளனர். இந்த போராட்டம் 24 மணி நேரத்துக்கு மேலாக நடந்துள்ளது. ஊர்வலத்தினர் பெருமளவு வாகனங்களில் வந்து போக்குவரத்துக்கு தடை ஏற்படுத்தினர்.

இதை தொடர்ந்து பிரதமர் நாட்டில் அவசர சட்டத்தை கொண்டுவர ராணுவ தளபதிகளை அழைத்து ஆலோசனை நடத்தியுள்ளார். பிரதமரின் ஆலோசனையை இராணுவ தளபதிகள் ஏற்க மறுத்ததால் பிரதமர் தக்சின் பதவியில் இருந்து விலக சம்மதம் தெரிவித்துள்ளார். அது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் "நாட்டின் நலனுக்காக இதை ஏற்கிறேன் எதிர்க்கட்சிக்கு பயந்து ஓடவில்லை. எனது உதவியாளர்களில் ஒருவர் பிரதமராக இருப்பார். ஆட்சியை நடத்த நடுநிலைக்குழு அமைக்கப்படும்" என கூறியிருந்தார். ஆனால் எதிர்க்கட்சிகள் பிரதமரின் நடுநிலைக் குழுவை ஏற்க முடியாது என்றும் அந்த குழு நடுநிலையாக இருக்காது என்றும் கருத்து தெரிவித்துள்ளன. இன்னும் 15 மாதத்தில் தேர்தல் நடத்தப்படும் என பதவி விலகிய பிரதமர் தக்சின் கூறியுள்ளார்.

## தமிழக தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது

தமிழகத்தின் 39 லோக்சபாத் தொகுதிகளுக்கும் 234 சட்டமன்றத் தொகுதிகளுக்குமான தேர்தல்கள் மே மாதம் 11ம் திகதி இடம்பெறவுள்ளது. வேட்புமனுத் தாக்கல் ஏப்ரல் 13 முதல் 20 வரை இடம்பெறும். வழமையான அ.தி.மு.க, தி.மு.க கூட்டணியுடன் இம்முறை கார்த்திக் தலைமையிலான பாவர்ட் பிளாக் கட்சியும் விஜயகாந்தின் புதிய கட்சியும் இத்தேர்தலில் களமிறங்கி உள்ளன. இக்கட்சிகள் அ.தி.மு.க, தி.மு.க கூட்டணியின் வாக்குகளை பிளவுபடுத்தலாம் என்றும் நம்பப்படுகிறது.

வி.புலிகளின் தீவிர ஆதரவாளராகக் கருதப்படும் வைகோபாலசாமி தி.மு.கவில் இருந்து அ.தி.மு.கவுக்கு பல்டி அடித்துள்ளார். தீவிர வெளிப்படையான புலி எதிர்ப்புடைய அ.தி.மு.கவுடன் வைக்கோ இணைந்தது ஆச்சரியப்படுவதற்கில்லை என்றும் வைக்கோ எப்போதுமே தன்னிகரற்ற சந்தர்ப்பவாத அரசியல்வாதி எனவும் தமிழக அரசியல் ஆய்வாளர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார். யார் மத்தியில் ஆட்சி அமைத்தாலும் வைக்கோவின் ம.தி.மு.க அமைச்சர் பதவியை பெற்றுக்கொண்டுவிடுமென அவ்விமர்சகர் மேலும் தெரிவித்தார்.

தமிழக அரசியலில் தமிழ் சினிமாவின் தாக்கம் குறிப்பிடத்தக்கதாக இருந்தாலும் ரஜனிகாந்த், கமலஹாசன், சூர்யா, விஜய் போன்ற முன்னணி காதாநாயகர்கள் அரசியலில் இருந்து ஒதுங்கியே உள்ளனர்.

# பதட்டமான சூழலில் பாலஸ்தீனம்



பாலஸ்தீனத்தின் மேற்கு கரையில் ஜெரிகோ சிறைச்சாலை உள்ளது. இச்சிறையில் பாலஸ்தீன விடுதலைக்கான அணியின் தலைவர் அகமது சதாத் உட்பட பல்வேறு பாலஸ்தீன போராளிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இஸ்ரேல் மந்திரி ஒருவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து 2001ம் ஆண்டு சதாத்தும் அவரது சகாக்கள் 5 பேரும் கைது செய்யப்பட்டனர். இவர்கள் ஜெரிகோ சிறையில் அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் சர்வதேச கண்காணிப்பாளர்கள் மேற்பார்வையில் அடைக்கப்பட்டு இருந்தனர்.

சர்வதேச கண்காணிப்பாளர்கள் ஜெரிகோ சிறையில் பாதுகாப்பு இல்லை என எதுவித முன்னறிவிப்பும் இன்றி வெளியேறிவிட்டனர். இவர்கள் வெளியேறிய சில மணி நேரங்களில் இஸ்ரேல் ராணுவம் மேற்கு கரைக்குள் நுழைந்தது. ஒரு ஹெலிகொப்ரர், 3 டாங்கிகள், 52 ஜீப்புகள், சகிதமாக வந்த இஸ்ரேல் ராணுவம் ஜெரிகோ சிறைமீது தாக்குதல் நடத்தியது. இதில் ஜெயில் காவலர் உட்பட பலர் இறந்து போயினர். பாலஸ்தீன கைதிகளும் சதாத்தும் அவரது கூட்டாளிகளும் இஸ்ரேல் ராணுவத்திடம் சரணடைய நிர்ப்பந்திக்கப்பட்டதன் அடிப்படையில் அவர்கள் சரணடைந்தனர். பாலஸ்தீன கைதிகளின் உடைகளை களைந்து உள்ளாடையுடன் கண்களை கட்டி ராணுவ வாகனங்களில் ஏற்றி இஸ்ரேல் ராணுவம் தனது சிறைச்சாலைக்கு அழைத்துச்சென்றது.

பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க கண்காணிப்பு குழுக்களின் திட்டமிட்ட இந்த துரோகத்தனத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பாலஸ்தீனியர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். பிரிட்டிஷ் கவுன்சில் பண்பாட்டு மையம் தீயிட்டு கொளுத்தப்பட்டது. இதில் அவுஸ்திரேலியா மற்றும் பிரான்ஸ் நாட்டை சேர்ந்தவர்கள் கடத்தப்பட்டு பின்பு விடுவிக்கப்பட்டனர். கடத்தப்பட்டவர்களை விடுவிக்க ஐ.நா பொதுச்செயலாளர் கொபி அனன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதற்கிடையில் ஐரோப்பிய ஒன்றியம். பாலஸ்தீனியர்களை எச்சரித்துள்ளது. ஐரோப்பிய நாடுகளின் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதையும் கடத்துவதையும் பாலஸ்தீனியர்கள் கைவிடாவிட்டால் அவர்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் வழங்கும் உதவி நிறுத்தப்படும் என்று கூறியுள்ளது. உதவி நிறுத்தப்பட்டால் பாதிக்கப்படுவது பாலஸ்தீனியர்கள் தான் என எச்சரிக்கை விடுத்துள்ளார் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரத்துறை ஆணையாளர் பெளிட்டா பெதோரோ வால்டனர். பாலஸ்தீனியத்துக்கு ஆண்டுதோறும் 419 கோடி ரூபாயை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிவருகின்றது.

## துருக்கி இராணுவ அத்துமீறல்கள் யூரோப் யூனியனில் இணைவது சாத்தியமா?

துருக்கி இராணுவத்தில் மிகப்பெரும் அதிகாரம் படைத்த ஜெனரல் Buyukanit மீது பல்வேறு படுகொலைகளுக்கு காரணமானவர் என குற்றச்சாட்டு எழுந்துள்ளது. தனிநாடு கோரிக்கையை முன்வைத்து போராடும் குர்தீஸ்தான் உழைப்பாளர் கட்சியின்(PKK) மீதும் அதன் அமைப்பாளர்கள் மீதும் கொலைவெறித் தாக்குதல்களை 1997-2000 ஆண்டுகளில் நடத்தியுள்ளனர். இவற்றில் இவ்வமைப்பினர் உட்பட 30,000 க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர்.

ஈராக்கின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள குர்திஸ்தான் பகுதியில் (துருக்கியின் தென்கிழக்கு) நூல்நிலையத்தில் நடைபெற்ற குண்டுவெடிப்பில் இராணுவ புலனாய்வு பிரிவினரும், குர்திஸ்தான் போராளிகளைப் பற்றி தகவல் கொடுப்பவரும் சம்பந்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்த குண்டு வெடிப்பு நிகழ்வுக்கு முழு ஒத்துழைப்பும் ஆசியும் வழங்கியவர் Buyukanit என்று ரகசிய விசாரணை அறிக்கையில் வெளிவந்துள்ளது. இதுபோல் 100க்கும் மேற்பட்ட சம்பவங்களில் ஜெனரலுக்கு தொடர்புள்ளதாக தெரிகிறது. இராணுவத்தில் உள்ள ஒரு பிரிவினர் யூரோப் யூனியனில் இணைவதற்கு அச்சம் கொண்டுள்ளனர். விசாரணை எதிர்கொள்ள நேரிடும் அச்சம் உள்ளதாக கருத்து தெரிவித்துள்ளனர்.

## ஐ.நா மனித உரிமை கொமிசன் கலைப்பு

ஐ.நா மனித உரிமை கொமிசன் வரும் ஜூன் 16க்குள் கலைக்கப்படுகிறது. அதற்கு பதிலாக மனித உரிமைகள் கவுன்சில் என்ற அமைப்பு உருவாகிறது. இது ஐ.நா பொதுச்சபையின் துணை அமைப்பாக செயற்படும். கூடுதல் அந்தஸ்து, கடமைப் பொறுப்பு கொண்டதாக புதிய அமைப்பு இருக்கும்.

மனித உரிமை கொமிசனை கலைக்கும்படி அதனை நிர்வகித்து வரும் ஐ.நா பொருளாதார மற்றும் சமூக கவுன்சிலுக்கு ஐ.நா பொதுச்சபை உத்தரவிட்டிருந்தது. இதையடுத்து கொமிசனை கலைக்க வகை செய்யும் தீர்மானம் வாக்கெடுப்புக்கு வராமலேயே ஐ.நா பொருளாதார மற்றும் சமூக கவுன்சிலில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.




## புஷ்ஷின் முன்னாள் ஆலோசகர் திருட்டுவழக்கில் கைது

அமெரிக்காவின் உள் விவகார கொள்கைகளை வகுப்பதில் புஷ்ஷின் முன்னாள் ஆலோசகராக கிளாட் அலெக்சாண்டர் அலன் (45) இருந்தார். இவர் மீது திருட்டு வழக்கில் தொடர்புள்ளதாகக் கூறி அமெரிக்க பொலிசார் இவரை கைது செய்துள்ளனர்.

அவரது வங்கிக் கணக்குகள், கிறெடிட் காட்கள் உட்பட அனைத்து கணக்குகளையும் ஆய்வு செய்து வருவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. புஷ்ஷின் ஆலோசகராக பணியாற்றிய அலன் கடந்த மாதம் தான் குடும்பத்தினருடன் அதிக நேரம் செலவிட விரும்புவதாக கூறி தனது பதவி விலகலுக்கான காரணத்தை கூறியிருந்தார்.

## ஜமைக்கா நாட்டின் முதல் பெண் பிரதமர்

மத்திய அமெரிக்காவில் உள்ள ஜமைக்கா நாட்டின் முதல் பெண் பிரதமராக போர்ஷியா சிம்சன் மில்லர் பதவி ஏற்க இருக்கிறார். 60 வயதான அவர் 1989ம் ஆண்டு முதல் மந்திரியாக இருந்து வருகிறார். ஆளும் மக்கள் தேச கட்சியின் தலைவராக இருக்கும் பிரதமர் பாட்டர்சனுக்கு பதில் புதிய தலைவராக கடந்த மாதம் நடந்த தேர்தலில் இவர் தேர்ந்து எடுக்கப்பட்டார். இருகிற 30ம் திகதி பாட்டர்சன் பதவியை ராஜினாமா செய்கிறார். அன்றே புதிய பிரதமராக போர்ஷியா பதவி ஏற்கிறார்.

## வேலை இழப்பு அபாயம் பிரான்சில் 15 இலட்சம் பேர் ஊர்வலம்

பிரான்ஸ் அரசு அறிமுகப் படுத்தியுள்ள புதிய தொழிலாளர் ஒப்பந்த முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொழிலாளர்கள் நாடு முழுவதும் ஊர்வலம் பொதுக்கூட்டங்கள் நடத்தினர்.

இந்த ஊர்வலத்தை கலைக்க பொலிசார் தண்ணீர் பாய்ச்சி அடித்தனர். இதில் 5 பொலிஸ் அதிகாரிகள் உட்பட 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். பரிஸில் நடந்த ஊர்வலத்தில் 3.5 இலட்சம் பேர் பங்கேற்றனர். நாடு முழுவதிலும் நடந்த ஊர்வலத்தில் 15 இலட்சம் தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

வேலையற்றோர் பிரச்சினைக்குத் தீர்வாக 26 வயதுக்கு குறைந்தோரை வேலைக்கு அமர்த்தி அவர்களை எந்த வித விளக்கமும் கேட்காமல் வேலையிலிருந்து நீக்கலாம் என்ற புதிய அறிவிப்பை பிரான்ஸ் அரசு வெளியிட்டிருந்தது.

## போர்க்குற்றவாளி மிலோசெவிக் மரணம்



யூகோசிலாவியா நாட்டின் முன்னாள் அதிபர் மிலோசெவிக், 1990க்களில் நடைபெற்ற பால்கன் யுத்தத்துக்கு மூலகாரணமான இவர் போர்க் குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டு ஹேக் அருகில் உள்ள ஐ.நா சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு இருந்தார்.

இவர் மீது 1992-95 ஆம் ஆண்டுகளில் பொசினியாவில் பல்லாயிரக்கணக்கான மக்களின் மரணத்துக்கு காரணமானவர் என்ற குற்றச்சாட்டு இருந்தது. மேலும் 1995ல் 80 ஆயிரத்துக்கு மேற்பட்ட முஸ்லீம்களை இவர் உத்தரவின் பேரில் கொன்றதாகவும் குற்றச்சாட்டு உள்ளது. இந்த குற்றச்சாட்டை மிலோசெவிக் மறுத்துவிட்டார். தான் குற்றவாளி அல்ல என்றே கூறிவந்தார்.

இந்நிலையில் இவர் மீது சர்வதேச நீதிமன்றத்தில் கடந்த 4 ஆண்டுகளாக வழக்கு நடைபெற்று வந்தது. இதன்போது உடல் நலம் பாதிப்படைந்ததாக மிலோசெவிக் தரப்பில் கூறப்பட்டுவருகின்றது. இவர் ரஷ்யாவில் சிகிச்சை பெறுவதற்கு கேட்ட அனுமதி மனுவும் நிராகரிக்கப்பட்டது. இந்நிலையில் இவர் ஐ.நா சிறப்பு ஜெயிலில் மரணமடைந்தார். மருத்துவர்களின் தவறான மருந்துகளால் இவர் கொல்லப்பட்டு இருக்கலாம் என இவரது மனைவி மிர்ஜானா தெரிவித்து இருக்கிறார். இவர் மீதான போர்க் குற்றங்களுக்கான வழக்கு சம்பிரதாயப்படி முடிவுக்கு வந்ததாக ஐ.நா தீர்ப்பில் நீதிபதி பற்றிக் றொபின்சன் தெரிவித்தார்.

## நபிகள் நாயகம் காட்டூன் பிரச்சனை புதிய பிரச்சனை கிளம்புகிறது

டென்மார்க்கை சேர்ந்த ஜில்லான் போஸ்டன் என்ற பத்திரிகையில் கடந்த செப்ரம்பர் 30ல் நபிகள் நாயகத்தை பரிகசித்து காட்டூன்கள் வெளியாகின. இது முஸ்லீம் நாடுகளில் மிகப்பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது. டென்மார்க் பொருட்களை புறக்கணித்தும் சில இடங்களில் தூதரகங்கள் தாக்கப்பட்டும் வன்செயல்கள் நடைபெற்றன. பின் பத்திரிகைகளும் மன்னிப்பு கோரியது.

இந்நிலையில் இம்மாதம் நபிகள் நாயகத்தை பரிகசித்து பத்திரிகையில் வெளியான காட்டூன் விவகாரம் தொடர்பாக அப்பத்திரிகை மீது குற்றம் சுமத்த நியாயம் இல்லை என்று டென்மார்க் அரசு தலைமை வழக்கறிஞர் தெரிவித்துள்ளார். இந்த புதிய கருத்து தெரிவிப்பால் டென்மார்க் மக்களுக்கு எதிரான கருத்து உருவாகும் என்றும் அதனால் முஸ்லீம் நாடுகளுக்கு செல்லும் டென்மார்க் நாட்டவர் தமது பாதுகாப்பு விசயத்தில் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று வெளியுறவு அமைச்சகம் உசார்படுத்தியுள்ளது.

மேலும் ஜில்லான் போஸ்டன் பத்திரிகை மீதான வழக்கில் அப்பத்திரிகையில் வரைந்த காட்டூன் டென்மார்க் சட்டத்தை மீறவில்லை என்று டென்மார்க் அரசின் பிராந்திய வழக்கறிஞர் அறிவித்து இருக்கிறார். இந்த கருத்து சொல்லத்தக்கதே என்று அரசு தலைமை வழக்கறிஞர் ஹென்னிங் பேட் தெரிவித்துள்ளார். இதை எதிர்த்து யாரும் நீதி மன்றத்துக்கு செல்ல முடியாது.

### நாசிகளுக்கு எதிராக தேசிய அளவிலான அதிரடி சோதனை



ஜேர்மனியில் நவீனமாக வளர்ந்து வரும் நாசிகளுக்கு எதிராக அதிரடி சோதனை 7 மாநிலங்களில் 100க்கும் மேற்பட்ட இடங்களில் மேற்கொள்ளப்பட்டது. தடை செய்யப்பட்ட இந்த நாசி உறுப்பினர்களின் இருப்பிடங்களில் இருந்து பெருமளவிலான கைக்குண்டுகள், விளம்பரங்களை உள்ளடக்கிய பனியன்கள், சிடிக்கள், புத்தகங்கள், போஸ்டர்கள், வீடியோக்கள், விளம்பர தொப்பிகள் மற்றும் கொம்பியூட்டர்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

காவல்துறை இதுவரை யாரையும் கைதுசெய்யவில்லை என அறிவித்துள்ளது. இருப்பினும் 37க்கும் மேற்பட்டவர்கள் ரகசிய விசாரணையில் இருந்து வருவதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

## வெனிசுலா நாட்டில் அமெரிக்க தூதுவர் சுற்றிவளைப்பு

வெனிசுலாவின் ஜனாதிபதியாக ஹியூகோ சார்வஸ் பதவி வகிக்கிறார். தீவிர இடதுசாரியான இவர் அமெரிக்க அரசுக்கு மிகவும் எதிரானவர். மற்றும் கியூபா அதிபர் பிடல் காஸ்ட்ரோவுடன் அரசியல் நெருக்கத்தோடு இணைந்து செயல்பட்டு வருகிறார். இவருடைய அமெரிக்க எதிர்நிலை செயற்பாடு அமெரிக்காவுக்கு எரிச்சலை ஏற்படுத்தி வருகிறது. புஷ் தன்னை கொல்ல சதி செய்கிறார் என சார்வஸ் பகிரங்கமாகவே அறிக்கை விட்டிருந்தார்.

இந்நிலையில் வெனிசுலா நாட்டிற்கான அமெரிக்க தூதர் வில்லியம் பிறவுண் பீல்ட் அந்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் ஒருவரின் வீட்டிற்கு சென்றுள்ளார். இதனை அறிந்த வெனிசுலா நாட்டு அதிபரின் ஆதரவாளர்கள் அமெரிக்க தூதரை சுற்றிவளைத்து முற்றுகையிட்டனர். 4 மணி நேரம் கட்டடத்தில் சிக்கி தவித்த அமெரிக்க தூதர் பின்பு பொலிசாரால் மீட்கப்பட்டார். அமெரிக்க தூதரின் கார் டயர்களை முற்றுகையாளர்கள் தீ வைத்து எரித்தனர்.

# HARTEX

ESTABLISHED 1969

THE GREAT OUT DOORS

- COMBAT
- PULLOVERS
- MAP CASES
- THERMAL UNDERWEAR
- RAINWEAR
- BODY WARMERS
- SHORTS
- COMPRESSORS BAGS
- CLOTHING
- BOOTS
- COOKWARE
- MONEY BELTS
- CUTLERY SETS
- HIKING BOOTS
- HAMMOCKS
- PLATES
- WEBBING
- GLOVES
- HEADWEAR
- HIKING BOOTS

Competitive prices



55 VICTORIA ROAD
RUISLIP MANOR
MIDDX, HA4 9BS
TEL: 01895 634244

321 NORTHOLT ROAD
SOUTH HARROW
MIDDX, HA2 8JA
TEL: 020 8864 3333

OPEN 7 DAYS

## Promet Technology Ltd.

Architectural and Structural Steelwork

Call us on:
020 8965 0500
or Fax:
020 8965 3030

## London Airport Taxi Service

0870 042 8886 BAtransfer.COM

Transfers To and From All London Airports to Anywhere in UK

£2.00 Off
PER JOURNEY WHEN YOU HAND OVER THIS VOUCHER TO DRIVER

விமானநிலையம் செல்லவும் அழைத்து வரவும் அனுபவம் பெற்றவர்கள்.

## Morjarias Toys & Gifts



Car Flags
Summer Toys
Stationery
Soft Toys
Murtis
Tools – Hardware
Rizla – Duracell
Toiletries
Photo Frames

Party Goods
Household Items
Candles - Giftware
Panasonic Batteries
Pocket Money Toys
Helium Balloons
£ - Pound Lines - £



Trade Only

Morjarias House
North Circular Road
London NW10 7UD
☎ 0870 333 6898
www.toysgifts.biz

| Opening Times | | |
|---|---|---|
| Mon to Fri | 10am - 6pm | |
| Late Night Thur | 10am - 8pm | |
| Saturday | Closed | |
| Sunday | 9am - 3pm | |

## George Fraser - Dedicated to Quality Car Care Service

MERCEDES-BENZ ENGINEERS

Specialists in Mercedes-Benz Service, Repairs, Bodywork and Electrics

Repair and exchange of automatic gearboxes

- 24 years experience
- Mercedes-Benz trained technicians
- Free delivery & collection
- Free MoT on major Services
- Official Mercedes-Benz Diagnostic on site

Call us now on
☎ 020 8795 1055
Wembley, Middlesex

## LONDON CELLULAR

NOKIA AUTHORISED SERVICE CENTRE

1000 Mins
ANY TIME ANY NETWORK
One Off Payment £10



orange

## J.K. SHAH

J.K. Shah (B.A.Hons) F.C.C.A

Chartered Certified Accountant
Accountants, Tax and Business Advisers
Complete Accounting Services

ACCOUNTANCY
Accounts prepared for Sole Traders, Partnerships & Limited Companies

TAXATION
All kinds of taxation matters

VAT & BOOK-KEEPING
Competitive Book-keeping and VAT Service, Using Computerised System

PAYROLL
Comprehensive Computerised Payroll Services

ACCA

572-574 Romford Road, Manor Park, London E12 5AF
Tel: 020 8553 2436 Fax: 020 8514 6939
E-mail: info@jkshah.com
Internet: www.jkshah.com

## Sarna & Sons Jewellers Limited



95 The Broadway, Southhall
Middlesex UB1 1LN
T: 020 8893 5520 / 5533
F: 020 8795 0824

## SAMS Accounting Services Ltd.

- Audit & Accountancy
- Prepare Monthly Management Accounts
- Tax Planning & Refund
- Specialists in Solicitor Accounting
- SAGE Line 50 Payroll

Call Mrs. Sumathi Jankan on
020 8509 8484
077 1557 6989

Email: info@samsaccounting.co.uk
92a Forest Road, Walthamstow, London E17 6JQ

To Advertise 07957681944

## MANUFACTURING LTD

T:020 8571 0043/020 8574 2571 F:020 8843 0746
22 Uxbridge Road, Southhall, Middx UB1 3DZ

mbs

-Durable-Unbeatable Price-Free Design & Delivery-5 Years Guarantee-All Units Made from 18mm

Heating & Plumbing supplies, Bathroom Showers & Sanitary Ware, Fittied Kitchens, Bedroom Furniture, Marble & Granite Floors, Worktops, Tiles & Other Products

e-mail: mbsmanufacturing@btconnext.com
mbsgroupcompanies.com

## V.J.CARPETS

110 The Green, Southall Middlesex, UB2 4BQ
Tel: 020 8574 9033

SPECIALOFFERS

FREE UNDERLAY WORTH £3.57 SQ.MTR WITH CARPETS OVER 5.96 S.Q. MTR

WE ARE NOW OFFERING FREE FITTING, FREE MEASURING FREE ESTIMATING & FREE LOCAL DELIVERY

HEAVY DOMESTIC CUT PILE GRAPHIC
WAS £10.75 sq.mtr
NOW £8.36 sq.mtr

CONTRCT CORD BUILT IN UNDERLAY OR WOVENBACK
£2.99YD £3.58 SQ MTR

ASCOT CUT PILE GRAPHIC
WAS £10.75 SQ.MTR
NOW £8.36 SQ. MTR

HEAVY PRINTS BUILT IN UNDERLAY
was £6.99 SQ.MTR
NOW £4.77 SQ .MTR

HEAVY DOMESTIC WILTONS
WAS £14.34 SQ.MTR.
NOW £10.75 SQ.MTR.
LIMITED STOCK

HEAVY DOMESTIC TWIST
WAS £11.55 SQ. MTR
NOW £9.55 SQ. MTR.

FITTED FREE ON ALL CARPETS OVER £4.77 SQ. MTR.

THIS IS JUST A SMALL EXAMPLE OF A LARGE SELECTION. WE WELCOME YOU TO VISIT OUR STORE ROOM OR CALL US

TEL.020 8574 9033

10% EXTRA DISCOUNT

OPEN: MON - SAT
9.00AM TO 6.00PM

## skylord travel

Skylord Travel Special Offers

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Bangalore | from £325 | Bombay | from £265 | Chennai | from £325 |
| Calcutta | from £365 | Colombo | from £380 | Delhi | from £265 |
| Hyderabad | from £370 | Trivandrum | from £325 | | |

Above Fares are nett exclude taxes & Fuel Surcharges

Eastcote : 020 8582 1111 London : 020 7388 8111 Southall : 020 8537 1111